பக்கங்கள் 25

# மாலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவ ஆண்டு 2054 | தை 24 | புதன்கிழமை | 07.02.2024 | அதிர்வு 191

## அமர்வில் பங்கேற்க கெஹலிய மறுப்பு



இன்று ஆரம்பமான ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத் தொடர் அமர்வில் பங்கேற்க சிறைனாள் அமைச்சர் கெஹ

04



### ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத் தொடர் ஆரம்பம்

# வாருங்கள் நாங்கள் ஒன்றுதிரண்டு புதிய நாட்டைக் கட்டியெழுப்புவோம்

### கொள்கைப் பிரகடன உரையில் ஜனாதிபதி அழைப்பு

**கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் பல்வேறு மதங்கள் இனங்கள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் நாட்டின் எதிர்காலத்திற்காக அனைவரும் பொதுவான இணக்கப்பாட்டுக்கு வர வேண்டிய முக்கியமான தருணம் வந்துள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**



நாட்டைக் கட்டியெழுப்ப அரசு ஆரம்பிக்கும் வேலைத் திட்டத்தில் அனைவரும் ஒற்றுமையுடன் இணைந்தால் மாத்திரமே இந்த வேலைத் திட்டத்தை மேலும் விரைவுபடுத்த முடியும் என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, பதவிகளைப் பெற கனவு காணும் சிலர், நாட்டுக்குப் பொய்யான கருத்துக்களை வெளியிடுகின்றனர் என்றும் தெரிவித்தார்.

யதார்த்தத்தைப் புறக்கணித்து கனவுகளின் பாதையில் பயணித்தால் நாடு மீண்டும் பெரும் ஆபத்தில் தள்ளப்படும் என்று எச்சரித்த ஜனாதிபதி, பல்வேறு தனிப்பட்ட நலன்களுக்காக நாடு பற்றிய பொறுப்பைப் புறக்கணித்தால் வரலாறு எம்மை துரோகிகள் எனப் பெயரிடும் என்றும் சுட்டிக்காட்டினார்.

04



## இலங்கைக் கடற்படையின் முன்னாள் தளபதி

# அட்மிரல் சந்தகிரியும் சஜித்துடன் சங்கமம்!

இலங்கைக் கடற்படையின் 14 ஆவது கடற்படைத் தளபதியாக இருந்து ஓய்வுபெற்ற அட்மிரல் தயா சந்தகிரி, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை சந்தித்து அவரது அரசியல் பயணத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துகொண்டார்.

கடல்சார் மற்றும் கடற்படைத் துறையில் அவருக்கு இருக்கும் பரந்த அறிவு மற்றும் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அவரை ஐக்கிய மக்கள் சக்தியின் கடல்சார் மற்றும் கடற்படைக் கொள்கைகள் தொடர்பான ஆலோசகராக இன்று நியமித்தார்.

மூன்று தசாப்த கால யுத்தத்தில் அவர் ஆற்றிய தாராள பங்களிப்பு காரணமாக 2001 ஆம் ஆண்டு,ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் இலங்கைக் கடற்படையின் தளபதியாக நியமிக்கப்பட்டார்.



53 வருட கால கடற்படை வரலாற்றில் மிகவும் அனுபவம் வாய்ந்த கடற்படை தளபதியாக இவர் வரலாற்றிலும் இடம்பிடித்துள்ளார்.

# மகன்மாரைக் கடுமையாகத் தாக்கி கொடுமைப்படுத்திய தந்தை கைது!

கொட்டகலை, பத்தன பகுதியில் தமது இரு மகன்மாரைக் கடுமையாகத் தாக்கி – கொடுமைப்படுத்திய தந்தை லிந்துலை பொலிஸாரால் இன்று காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

லிந்துலை, நாகசேனை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ள அவர் விசாரணைகளுக்காகத் தம்புள்ள – பத்தன பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

மேற்படி இரு சிறார்களின் தாய் வெளிநாடு சென்றுள்ளார். பத்தனை பகுதியில் உள்ள தமது தாத்தா, பாட்டியின் பராமரிப்பிலேயே அவர்கள் வளர்ந்து வந்துள்ளனர். இந்நிலையில், மது அருந்திவிட்டுவந்து தமது மருகமன் (சிறார்களின் தந்தை) பேரக் குழந்தை களைக் கொடுமைப்படுத்தி வருகின்றார் என்று பாதிக்கப்பட்ட சிறார களின் தாத்தா ஊடங்களிடம் தெரிவித்திருந்தார்.



தமது மகன்மாரைக் கடுமையாகத் தாக்கி அதனைத் தந்தை சமூக ஊடகங்களில் ஒளிப்பதிவு செய்யும் வீடியோவையும் ஊடகங்கள் வெளிப்படுத்தி இருந்தன.

இதையடுத்து மகன்மாரைக் கடுமையாகத் தாக்கும் தந்தையைக் கைது செய்யுமாறு பெரும்பாலான சமூக ஆர்வலர்களும், இளைஞர்களும் பொலிஸாரை வலியுறுத்தியிருந்தனர். விரைந்து செயற்பட்ட பொலிஸார் அந்த நபரை இன்று கைது செய்துள்ளனர்.



# யாழில் சட்டவிரோத மணல் ஏற்றி வந்த டிப்பர் மீது பொலிஸார் துப்பாக்கிச்சூடு!

## சாரதி உட்பட மூவர் கைது

(எஸ்.நிதர்ஷன், ந. லோகதயாளன்)

யாழ்ப்பாணம், புத்தூர் பகுதியில் சட்டவிரோத மணல் ஏற்றி வந்த டிப்பர் வாகனம் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டு மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இன்று காலை பளையிலிருந்து சட்டவிரோதமான முறையில் மணலை ஏற்றி வந்த டிப்பர் ரக வாகனம் புத்தூர் பகுதியில் வைத்து பொலிஸாரால் இடைமறிக்கப்பட்டது.

வாகனம் மறிக்கப்பட்ட போது பொலிஸாரை உதாசீனம் செய்த சாரதி வேகமாகச் சென்று புத்தூர் பிரதான வீதி ஊடாக சிறுப்பிட்டி, ஆவரங்கால் உள்ளிட்ட பல பாதையில் ஊடாக சுமார் 30 நிமிடங்களுக்கு மேலாக வேகமாக தப்பிச் சென்றுள்ளார்.

வாகனத்தைப் பின்தொடர்ந்து துரத்தி வந்த பொலிஸார் பாடசாலை மாணவர்கள் பயணித்துக் கொண்டிருந்த புத்தூர் பிரதான வீதியை அடுத்து மக்கள் நடமாட்டம் குறைந்த வீரவாணி எனும் பகுதியில் வைத்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு குறித்த டிப்பர் ரக வாகனத்தைத் தடம்புரளச் செய்துள்ளனர்.

துப்பாக்கிப் பிரயோகத்துக்கு இலக்கான டிப்பர் ரக வாகனத்தின் டீசல் மற்றும் டயர் மீது துப்பாக்கிச் சன்னங்கள் பாய்ந்ததில் சாரதி உட்பட இருவர் வாக னத்துடன் சேர்ந்து தடம் புரண்டனர்.

இவர்களைக் கடமையிலிருந்த காங்கேசன்துறை விசேட குற்றத் தடுப்புப் பொலிசார் கைது செய்து அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

அந்த டிப்பர் ரக வாகனம் பொலிஸார் துரத்திச் சென்றபோது இடைவழியே ஏற்றி வந்த மணலைப் பறித்தவாறு சென்றதுடன் மீதமிருந்த மணல் வாகனம் தடம் புரண்ட இடத்திலேயே கொட்டிக் கிடந்தது.

தடம் புரண்ட வாகனத்தை கனரக வாகனத்தில் உதவியுடன் தூக்கிய பொலிஸார் வீதியில் இருந்த மணலையும் அப்புறப்படுத்தினர்.

இதன்போது பளைப் பகுதியைச் சேர்ந்த டிப்பரக வாகனத்தின் உரிமையாளர் எனக் கருதப்படும் இளைஞர் ஒருவரையும் அவ்விடத்தில் வைத்து காங்கேசன்துறை விசேட குற்றத் தடுப்புப் பொலிஸார் கைது செய்தனர்.

பாடசாலை மாணவர்கள் பயணம் செய்து கொண்டிருந்த அந்தப் பகுதியில் டிப்பர் ரக வாகனம் சட்டவிரோத மணலுடன் வேகமாகப் பயணம் செய்கின்றது என்று காங்கேசன்துறை விசேட குற்றத் தடுப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் கைதான மூவரும் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.





# ஆணின் சடலம் மீட்பு!

வாதுவை கடற்கரை பகுதியில் ஆண் ஒருவர் நேற்று மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் 40 முதல் 50 வயதுக்குட்பட்டவர் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

மீட்கப்பட்ட சடலம் பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாதுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## அமரர்வில்...

லிய ரம்புக்வெல மறுத்துள்ளார்.

தரமற்ற மருந்து இறக்குமதி தொடர்பில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல, நேற்று தனது அமைச்சர் பதவியையும் இராஜினாமா செய்துள்ளார்.

இந்நிலையில், சிறைக் காவலர்களின் பாதுகாப்புடன் கெஹலிய நாடாளுமன்றம் செல்ல முடியும். ஆனால், அவ்வாறு நாடாளுமன்றம் செல்வதற்கு அவர் மறுத்துள்ளார்.

கெஹலிய ரம்புக்வெல மீது தொடர்ந் தும் விசாரணைகள் இடம்பெறுகின்றன. தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்த தற்கான ஆவணங்களும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சின் உயர் அதிகாரி கள் சிலரும் விசாரணைக்கு உட்படுத் தப்பட்டு வருகின்றனர்.

---

## வாருங்கள்...

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத் தொடரை இன்று ஆரம்பித்து வைத்து ஆற்றிய கொள்கை விளக்க உரையின்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு குறிப் பிட்டார்.

நாடாளுமன்ற வளாகத்திற்கு வருகை தந்த ஜனாதிபதியை பிரதமர் தினேஷ் குணவர்தன, சபை முதல்வர் சுசில் பிரேம ஜயந்த் மற்றும் ஆளும் கட்சி பிரதம கொறடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகியோர் வரவேற்றனர்.

அதன்போது, நாடாளுமன்ற பிரதான வாயில் முன்பாக பாடசாலை மாணவிகள் ஜெயமங்கல கீதம் பாடினர்.

படைக்கள சேவிதர், பிரதி படைக்கள சேவிதர், சபாநாயகர், நாடாளுமன்ற செயலாளர் நாயகம், பிரதி செயலாளர் நாயகம் உள்ளிட்டோர் புடைசூழ நாடா ளுமன்ற அவைக்குள் பிரவேசித்த ஜனா திபதி ரணில் விக்கிரமசிங்க, நாடா ளுமன்றத்தில் தனது கொள்கை விளக்க உரையை நிகழ்த்தினார்.

தமது தனிப்பட்ட கனவுக்காக அல்லா மல் நாட்டின் பொதுவான கனவை நன வாக்கும் நோக்கத்திற்காக புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்க அனைவரும் ஒன்றிணையுமாறும் ஜனாதிபதி அனைவருக்கும் அழைப்பு விடுத்தார்.

தன்னைக் கடுமையாக விமர்சித்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பான்மையானோர் பழைய பகைகளை விடுத்து, நாட்டுக்காக ஒரு பொதுப் பயணத்திற்கு இணங்க முடியு மாக இருந்தால், தம்முடன் நீண்டகாலம் நெருக்கமாகப் பணியாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியினரால் ஏன் அவ்வாறு செயற்பட முடியாது என்று ஜனாதிபதி கேள்வி எழுப்பினார்.

விண்கல் வேகத்தில் வீழ்ந்திருந்த இந்நாட்டின் பொருளாதாரத்தை ரொக் கெட் வேகத்தில் மீண்டும் உயர்துவதற்கு அரசால் முடிந்துள்ளது என்று தெரிவித்த ஜனாதிபதி, இது தனித்துவமான வெற்றி என்றும் சுட்டிக்காட்டினார்.

வீழ்ச்சியடைந்த நாட்டை மீட்டெடுப்பது மிகவும் சிரமமானதும் கடினமானதுமான பணியாக இருந்தாலும் ஏனைய நாடு களைப் போன்று நீண்டகால சிரமங்கள் மற்றும் வலிகள் இன்றி, நாட்டை மீட்டெ டுக்க முடிந்தது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சிரமத்துடனும் சில சமயங்களில் தயக்கத்துடனும் அரசு நடைமுறைப் படுத்திய பொருளாதார சீர்திருத்தங்களி னால் நாட்டில் நிலையான பொருளாதா ரத்தை கட்டியெழுப்பும் பயணம் சாத்திய மாகியுள்ளது என்று சுட்டிக்காட்டிய ஜனாதி பதி, நாட்டின் பொருளாதாரம் ஸ்திரமா கும்போது வரிச் சுமையைக் குறைப்பதன் மூலம் மக்களுக்கு நிவாரணம் வழங்க முடியும் என்றும் தெரிவித்தார்.

சிக்கலான மறுசீரமைப்பு திட்டத்தை இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் செயல்படுத்த எதிர்பார்ப்பதாகவும், இது பொருளாதாரத்தை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கான அடிப்படை அடித்தளமாக அமையும் என்றும், கடனில் இருந்து விடுபடுவதற்கான பாதையில் இது ஒரு மைல் கல்லாக மாறும் என்றும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் முழுமையான உரை பின்வருமாறு:-

“ஆரம்பம் முதல் இன்று வரை உலகம் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்தது. நாடுகள் நெருக்கடிகளைச் சந்தித்தன. தனிப்பட்ட வாழ்க்கையிலும் நெருக்கடி ஏற்பட்டது.

சில சமயங்களில் நெருக்கடியிலிருந்து விடுபட முடிந்தது. வேறு சில சந்தர்ப்பங் களில், நெருக்கடியிலிருந்து மீள முடியவில்லை. நெருக்கடியைச் சபித்துக் கொண்டிருப்பதன் மூலம் நெருக்கடி யிலிருந்து மீள முடியாது. நெருக்கடிக்கான காரணங்களை விமர்சிப்பதன் மூலம் மீள முடியாது.

நெருக்கடிகளைச் சரியாக நிர்வகிப்ப தன் மூலம் தான் உலகமும் நாடுகளும் தனிப்பட்ட வாழ்க்கையிலும் நெருக்கடிக ளைத் தீர்க்க முடிந்துள்ளது.

நெருக்கடி முகாமைத்துவத்தில் அடிப் படை என்னவாக இருக்க வேண்டும்?

புத்தபிரான் போதித்த ஒரு போத னையை இங்கு மேற்கோள் காட்ட விரும்பு கிறேன்.

“அத்ததீபா – விஹரத”

தங்களுக்குத் தாங்களே ஒளியாக வாழ வேண்டும்.

நெருக்கடியைச் சமாளிக்கும் செயல் முறை தன்னிடமிருந்தே ஆரம்பிக்க வேண்டும். உலகில் எங்கும் ஏனையவர்க ளைக் குறைகூறி நெருக்கடியைச் சமாளித்தது கிடையாது.

எம்மை எமக்கான ஒளியாக மாற்றா விட்டால், நம் எண்ணங்களையும் கருத் துக்களையும் சீர்செய்யாவிட்டால், நமக்கு நன்மை நடக்காது. நாட்டுக்கு எந்த நன்மையும் இல்லை. நெருக்கடிக்கும் தீர்வு இல்லை.

முறைமையில் மாற்றம் இருக்காவிட் டால் சிஸ்டம் சேஞ்ச் பற்றி தொண்டைக் கிழியக் கத்தினாலும் நாம் அடிப்படையில் இருந்து மாறாவிட்டால் முறைமைய மாற்ற எம்மால் முடியாது.

அதனைச் சுட்டிக் காட்டும் வகையில் கடந்த காலம் , நிகழ்காலம், எதிர்காலம் பற்றிய பல விடயங்களை இச்சபையில் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

2022 பெப்ரவரியில் இந்த நாடு இருந்த நிலை, நம் அனைவருக்கும் நினைவில் இருக்கும். 2023 பெப்ரவரி மாதமளவில், இந்த நாட்டை ஒரு சிறந்த நிலைக்கு கொண்டு வர முடிந்தது. இந்த வருடம் பெப்ரவரியாகும் போது கடந்த ஆண்டு பெப்ரவரி மாதத்தை விட சிறந்த நிலைக்கு நாடு முன்னேறியுள்ளது.

கடந்த ஆண்டு பெப்ரவரி மற்றும் இந்த பெப்ரவரி வரையான நமது பொரு ளாதார குறிகாட்டிகள் சிலவற்றை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

கடந்த ஆண்டு பணவீக்கம் 50.06 சதவீதமாக இருந்தது. இன்று அது 6.4சதவீதமாக குறைந்துள்ளது.

உணவுப் பணவீக்கம் 54.4 சதவீத மாக உள்ளது. இன்று அது 3.3 சதவீத மாக உள்ளது.

அன்று ஒரு டொலரின் பெறுமதி 363 ரூபாய். இன்று 314 ரூபாய்.

2022 ஆம் ஆண்டின் இறுதியில், வரவு செலவுத் திட்ட முதன்மை பற்றாக் குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.7 சதவீதமாக இருந்தது. ஆனால் 2023 இல் முதன்மை வரவு – செலவுத் திட்டத்தில் உபரியை ஏற்படுத்த முடிந்தது. சுதந்திரத்திற்குப் பின்னரான 76 வருடங்களில் இலங்கையானது முதன் மையான வரவு – செலவுத் திட்ட உபரியை ஏற்படுத்திய 6 ஆவது சந்தர்ப்பம் இதுவாகும்.

2022 ஆம் ஆண்டின் இறுதியில், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.9 சதவிகிதம் இருப்புப் பற்றாக்குறை காணப்பட்டது. 2023 ஆம் ஆண்டின் இறுதியில், எங்களால் உபரியை ஏற் படுத்த முடிந்தது. 1977ஆம் ஆண்டுக்குப் பிறகு நிலுவைத் தொகை உபரியை ஏற்படுத்திய முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

2023 இல் 28 சதவீதமாக இருந்த வட்டி விகிதம் தற்போது 12 சதவீதமாக உள்ளது.

2022 ஆம் ஆண்டின் இறுதியில், 52 பிரதான அரச நிறுவனங்கள் 745 பில்லியன் ரூபா நட்டம் ஈட்டின. செப்டம்பர் 2023இற்குள், இந்த 52 நிறுவனங்களும் 313 பில்லியன் ரூபாய் லாபம் ஈட்டியுள் ளன. ஆனால் இந்நிறுவனங்கள் கடன் சுமையை தாங்க முடியாத நிறுவனங்க ளாக காணப்படுகின்றன.

தெரிவுசெய்யப்பட்ட கடனைச் செலுத்த முடியாத நிலையை 2022 ஏப்ரல் 12 ஆம் திகதி இலங்கை உத்தியோகபூர் வமாக அறிவித்தது. அந்த சமயம் எமது அந்நியச் செலாவணி கையிருப்பு பூஜ்ஜியம் வரை சரிந்தது. தற்போது அந்த நிலை மாறிவிட்டது. 2023 டிசம்பர் நிலவரப்படி, நமது அந்நியச் செலாவணி கையிருப்பு 4.4 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

குறுகிய காலத்தில், சுற்றுலாத் துறை யில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம்

# நாலாம் பக்கத் தொடர்ச்சி



அடைந்துள்ளோம். 2022 ஆம் ஆண்டில் நம் நாட்டிற்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 194,495 ஆகும். 2023 இல் அந்த எண்ணிக்கையை 1,487,303 ஆக அதிகரிக்க முடிந்தது. இந்த ஆண்டு ஜனவரியில் 200,000 இற்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்தனர்.

மேலும், 2023இல் பல சாதகமான நகர்வுகளை முன்னெடுத்தோம். கோட்டா முறையில் வழங்கப்பட்ட எரிபொருள் விநியோக முறை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. தற்போது தொடர்ந்து மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது. எரிபொருள்தட்டுப்பாடு இல்லை. விவசாயத்திற்குத் தேவையான உரங்கள் தட்டுப்பாடின்றி கிடைக்கிறது. மீனவர்களுக்கு எரிபொருள் தட்டுப்பாடு இல்லை.

வாகனங்கள் தவிர அனைத்து இறக்குமதி கட்டுப்பாடுகளும் இப்போது நீக்கப்பட்டுள்ளன. நாட்டுக்கு அத்தியாவசிய உணவு மற்றும் மருந்துகளை இறக்குமதி செய்வதில் எந்த பிரச்சினையும் இல்லை. மேலும், உற்பத்தித் தொழிற்துறைகளுக்குத் தேவையான மூலப் பொருட்களின் விநியோக வலையமைப்பில் எந்தத் தடையும் இல்லை.

2022 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 7.8 சதவிகிதமாக சுருங்கியது. 2022 முதல், தொடர்ந்து 6 காலாண்டுகளில் எதிர்மறையாக இருந்தது. ஆனால் 2023ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 1.6 சதவீத வளர்ச்சியை எட்டினோம்.

நமது பொருளாதாரம் விண்கல் வேகத்தில் சரிந்தது. ஆனால் தற்போது எமக்கு அதனை மாற்ற முடிந்துள்ளது. அதை மீண்டும் ராக்கெட் வேகத்தில் உயர்த்தியுள்ளோம். நாங்கள் வீ வடிவ மீட்பு அல்லது வீ வடிவ மீட்சியைப் பெற்று வருகிறோம்.

நாம் அடைந்த விசேடமான வெற்றியாக அதனைக் குறிப்பிடலாம். வீழ்ச்சியடைந்த நாடுகளின் பொருளாதார மீட்சி மிகவும் கடினமானது மற்றும் வேதனையானது. ஆனால் ஏனைய நாடுகளைப் போல நீண்ட கால சிரமங்கள் மற்றும் வலிகள் இல்லாமல் நமது பொருளாதாரத்தை மீட்டெடுக்க எம்மால் முடிந்தது.

நான் ஒரு உதாரணத்தைக் கோடிட்டுக் காட்டுகிறேன்.

கிரேக்கம் கடன் செலுத்த முடியாமல் 2009ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடியைச் சந்தித்தது. அதன் பின்னர் முழு நாடும் மிகவும் கடினமான சூழ்நிலையில் தனது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முயற்சித்தது. அந்தக் காலத்தில் பல நெருக்கடிகளைச் சந்தித்தது. மீண்டும் அந்தப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப சுமார் 10 வருடங்கள் தேவைப்பட்டது.

நமது நாடு குறுகிய காலத்தில் இத்தகைய விதிவிலக்கான சாதனைகளை எட்டுவது உண்மையில் உலக சாதனையாகும். எங்களால் எப்படி அவ்வாறான சாதனைப் படைக்க முடிந்தது?

2022ஆம் ஆண்டு முழுவதும் பொருளாதாரம் சரிந்தது. 2022 ஆம்ஆண்டை விட 2023இல் ஓரளவு பொருளாதார முன்னேற்றத்தை அடைய முடிந்தது. இது தற்செயலாக நடந்ததல்ல. மிகவும் கவனமாகவும் தொலைநோக்குடனும் தயாரிக்கப்பட்ட நுட்பமான பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்தியதால் இந்த முன்னேற்றம் ஏற்பட்டது.

மேலும், நாங்கள் தயாரிக்கும் கொள்கைகள், நடவடிக்கைகள், திட்டங்கள் அனைத்தையும் அவ்வப்போது நான் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தேன். மக்கள் முன்னிலையிலும் அவ்வப்போது பகிரங்கமாக அறிவித்தேன். பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் அவை பற்றி கலந்துரையாடவும் விவாதிக்கவும் வாய்ப்பு வழங்கப்பட்டது. அந்தக் கொள்கைகள் ஒருபோதும் மறைக்கப்படவில்லை. ஒவ்வொரு நடவடிக்கையையும் வெளிப்படைத்தன்மையுடன் செய்துள்ளோம்.

அரசியல் ஆதாயத்துக்காக நான் ஒருபோதும் முடிவுகளை எடுக்கவில்லை. ஒவ்வொரு முடிவையும் நாட்டு நலன் கருதியே எடுத்தேன். எமக்கு பாதகமாக இருந்தாலும் நாட்டுக்கு நன்மை பயக்கும் முடிவுகளை எடுக்க நாங்கள் தயங்கவில்லை. தனிப்பட்ட இலாபங்களை ஒதுக்கி வைத்துவிட்டு நாட்டுக்கு சரியான கொள்கைகளை செயற்படுத்தினோம்.

நாடாளுமன்றத்திலுள்ள சில தரப்பினர் அந்த முடிவுகளை எதிர்த்தனர். ஆனால் பெரும்பான்மையானோர் தமது தனிப்பட்ட அரசியல் நலன்களையும் இலக்குகளையும் பொருட்படுத்தாமல் நாட்டின் நலனுக்காக அந்த முடிவுகளுக்கு ஆதரவாக கையுயர்த்தினர்.

எதிர்காலத்தில் தேசத்தின் பாராட்டை அவர்கள் பெறுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

நாங்கள் இந்தப் பயணத்தில் படிப்படியாக முன்னேறிச் சென்றோம். 2022ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக அன்றிருந்த நாட்டின் உண்மையான நிலைமையை நான் எடுத்துக் காட்டினேன். பொருளாதார வீழ்ச்சியைத் தடுப்பதே இடைக்கால வரவு – செலவுத் திட்டத்தின் நோக்கமாக இருந்தது. 2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக பொருளாதாரத்தை நிலையான பாதைக்கு வழிநடத்தும் பல திட்டங்களை முன்வைத்தேன். பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்த தேவையான மறுசீரமைப்புகளின் ஆரம்ப கட்டமாக 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன.

சிரமத்துடனும் சில சமயங்களில் தயக்கத்துடனும் நாங்கள் செயல்படுத்திய பொருளாதார மறுசீரமைப்புகள் மற்றும் கொள்கைகள் காரணமாக, நாங்கள் தற்போது நிலையான பொருளாதாரத்தை நிறுவுவதற்கான பாதைக்கு பிரவேசித்திருக்கிறோம். அத்தோடு சர்வதேச நிதி நிறுவனங்கள் எங்கள் இலக்குகள் மற்றும் பயணம் குறித்து மகிழ்ச்சியடைந்துள்ளன.

இருண்ட பொருளாதார சுரங்கத்திற்குள் சிக்கியிருந்த நாம் தற்போது சுரங்கத்தின் முடிவில் வெளிச்சத்தைக் காண்கிறோம். தீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்த பொருளாதாரம் தற்போது ஆபத்தான நிலையில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக, நாட்டு மக்கள் பலர் நினைத்துப் பார்க்க முடியாத இன்னல்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. சிலர் தொழில்களை இழந்தனர். மேலும் சிலர் தங்கள் வருமான வழிகளை இழந்தனர். சிலர் தொழில் வாய்ப்புகளை இழந்தனர். இன்னும் சிலர் உரிமைகளை இழந்தனர். பெரும்பாலான துன்பங்கள் சாதாரண மக்களுக்குத்தான் சொந்தமானது.

இழந்த வாய்ப்புகளை கொஞ்சம் கொஞ்சமாக மக்களுக்கு வழங்க தற்போது நாம் முயற்சிக்கிறோம். மக்களின் இழந்த உரிமைகளை மீட்டெடுக்கும் வேலைத் திட்டத்தை ‘உரித்து’ என்ற பெயரில் அண்மையில் ஆரம்பித்தோம். உரித்து வேலைத் திட்டத்தின் ஊடாக இரண்டு அடிப்படை விடயங்களில் கவனம் செலுத்தி வருகின்றோம். ஒன்று காணி மற்றது வீடு.

இங்கு காணி உரிமை பிரதான இடத்தைப் பெறுகிறது. 1897 தரிசு நிலச் சட்டத்தின் மூலம் மக்களின் காணி உரிமையை காலனித்துவப் பிரித்தானிய அரசு பெற்றது. சுதந்திரத்திற்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த எந்த ஒரு அரசாங்கமும், பறிக்கப்பட்ட காணி உரிமைகளை மக்களிடம் மீள வழங்குவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அந்த காணி உரிமையை மீள வழங்கும் பணியை நாம் ஆரம்பித்துள்ளோம். இரண்டு மில்

# ஐந்தாம் பக்கத் தொடர்ச்சி

லியன் மக்களை காணி உரிமையாளர்களாக எமது சமூகத்தில் இணைக்கின்றோம். இது வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்த மற்றும் புரட்சிகரமான நகர்வாகும். அரிசியில் தன்னிறைவு பெற பல தசாப்தங்களாக விவசாயிகள் அனுபவித்த கடின உழைப்பக்கு வழங்கப்படும் ஒரு கௌரவமாகும்.

மேலும், இந்நாட்டு மக்களில் மூன்றில் ஒரு பகுதியினருக்கு முறையான வருமானம் கிடையாது. பொருத்தமான வீடு இல்லை. இந்த மக்களுக்கு வருமான வழி மற்றும் வீட்டு உரிமை வழங்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்போம். நகர்புர, குறைந்த வருமானமுடைய 50,000இற்கும் மேற்பட்டோருக்கு முழுமையான வீட்டுரிமை வழங்கப்படும்.

வெற்றிகரமான பொருளாதார அபிவிருத்திப் பாதையில் பயணிக்கும் போது நாட்டின் அனைத்துத் தரப்பினர் குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். குறிப்பாக வறிய மற்றும் நிர்க்கதியான மக்கள் குறித்து கவனம் செலுத்த வேண்டும். கடுமையான பொருளாதார நெருக்கடியின் மத்தியிலும் மக்கள் நலனுக்காக நடவடிக்கை எடுத்தோம்.

இந்த ஆண்டு அஸ்வெசும ஊடாக 24 லட்சம் பேருக்கு நன்மைகள் அளிக்க எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் நாட்டின் கீழ் மட்டத்தில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும். நமது நாட்டின் வரலாற்றில் இவ்வளவு பெரிய தொகை நிதி மானியம் வழங்கப்படவில்லை. வரும் பண்டிகை காலத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு தலா 20 கிலோ வீதம் அரிசி, நிவாரணமாக வழங்கப்படும்.

2022 ஓகஸ்ட் மாதமளவில், ஜனாதிபதி நிதியம் முற்றிலும் செயலிழந்தது. 9,000இற்கும் மேற்பட்ட மருத்துவ உதவிக்கான விண்ணப்பங்கள், பணம் இல்லாமல் குவிந்திருந்தன. ஓகஸ்ட் முதல் டிசம்பர் வரை மேலும் 4,000 விண்ணப்பங்கள் வரை கிடைத்தன. அவை அனைத்திற்கும் பணம் செலுத்தப்பட்டது. 2023 ஆம் ஆண்டில் 4,917 நோயாளர்களுக்கு 915 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது.

தற்போது பணம் செலுத்துவதற்கு பல மாதங்கள் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. மூன்று அல்லது ஐந்து வேலை நாட்களுக்குள் பணம் செலுத்தும் நடைமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு அனைத்து மருத்துவ உதவிகளையும் 50 சதவீதத்தில் இருந்து 100 சதவீதமாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும். இந்த உதவித் தொகைகளுக்கு மேலதிகமாக ஜனாதிபதி நிதியத்தின் ஊடாக பாடசாலை மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கும் வேலைத் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அரசு ஊழியர்களுக்கு நாம் விசேட கொடுப்பனவு ஒன்றை வழங்கினோம். ஓய்வூதியம் பெறுவோரின் சம்பளத்தை உயர்த்தினோம். 2016 முதல் 2020 வரை ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்கு சம்பள முரண்பாடு உள்ளது. அந்த பிரச்சினைக்கு விரைவில் தீர்வு வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். அரசின் வருமானம் அதிகரிக்கும் போது அதற்கு சமாந்தரமாக நிவாரணம் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

நாம் அடைந்துவரும் வளர்ச்சி சமூகத்தில் பேசப்படும் தலைப்புகளில் பிரதிபலிக்கிறது. சில காலம் முன்பு மின்வெட்டினால் ஏற்படும் பிரச்சினைகள் பற்றி பேசினோம். அப்போது, எவ்வளவு கொடுத்தாலும் தொடர்ச்சியாக மின்சாரம் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டது.

இன்று நாம் மின்சாரக் கட்டணத்தைப் பற்றி பேசுகிறோம். சில காலத்திற்கு முன்பு கறுப்பு சந்தையில் ஒரு லீட்டர் பெட்ரோல் 3000 ரூபாவிற்கு வாங்கப்பட்டது குறித்து பேசப்பட்டது. எரிபொருள் வரிசைகளில் மூன்று அல்லது நான்கு நாட்கள் செலவிடுவது பற்றி பேசப்பட்டது. இன்று நாம் இலங்கையில் முதலீடு செய்யும் புதிய எரிபொருள் நிறுவனங்கள் பற்றி பேசுகிறோம். காய்கறி வாங்க வழியில்லை என்று பேசிக்கொண்டனர். இன்று ஒரு கேரட்டின் விலை பற்றி பேசுகின்றனர்.

புத்தகம் அச்சடிக்க காகிதம் இருக்கவில்லை என்று அன்று கூறப்பட்டது. இன்று வற் வரி பற்றிப் பேசுகிறோம்.

ஆம். வற் வரி பலருக்கு சுமையாக உள்ளது. இந்தப் பிரச்சினையை நாம் உணராமல் இல்லை. அந்தப் பிரச்சினைக்கு நாம் படிப்படியாக தீர்வுகளை வழங்கி வருகிறோம். 2022 இல் 437,547 வரிக் கோப்புகள் இருந்தன. 2023 இறுதியில் வரிக் கோப்புகளின் எண்ணிக்கை 1,000,029 ஆக உயர்ந்துள்ளது. இது 130 சதவீத அதிகரிப்பு. வரி வலையமைப்பு விரிவடையும் போது, ஒரு தனிநபருக்கோ அல்லது ஒரு நிறுவனத்திற்கோ ஏற்படும் வரிச்சுமை குறையும். மேலும், நமது பொருளாதாரச் சீர்திருத்தங்களைச் செயல்படுத்துவதைத் தொடரும்போது, பொருளாதாரம் ஸ்திரமாகும்போது, வரிச்சுமையைக் குறைப்போம். “வற்” வரியின் சதவீதத்தை திருத்துவதற்கான வாய்ப்பு ஏற்படும்.

மலையளவு கடனைச் சுமந்துகொண்டுதான் இதையெல்லாம் செய்கிறோம். கடந்த காலம் முழுவதும் இந்தக் கடனைத் திருப்பிச் செலுத்தும் முறை குறித்து மீள் திட்டத்தைத் தயாரிப்பதில் நாங்கள் கடுமையாக உழைத்து வந்தோம். முதல் கட்டமாக, உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் திட்டம் நிறைவடைந்துள்ளது. இரண்டாவது கட்டமாக, வெளிநாட்டு கடன் வழங்குநர்களுடன் மறுசீரமைப்பு தொடர்பான கொள்கை ரீதியான உடன்பாடு எட்டப்பட்டது. தனியார் கடன் வழங்குநர்களுடன் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.

இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் இந்த சிக்கலான மறுசீரமைப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கிறோம். இது நமது பொருளாதாரத்தை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கான அடிப்படையாக அமையும். மேலும் கடன் அழுத்தத்திலிருந்து விடுபடுவதற்கான பாதையின் மையமாக இது மாறிவிட்டது.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவை இந்த ஆண்டு 2 சதவீதம் முதல் 3 சதவீதம் வரையான பொருளாதார வளர்ச்சியை எட்ட முடியும் என்று கணித்துள்ளன. 2025இல் அதை 5 சதவீதமாக உயர்த்த நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

2021 ஆம் ஆண்டில், தீயில் விழுந்திருந்த நாட்டை மீட்பதற்கான பணிகளை நாம் ஆரம்பித்தோம். 2021ஐ விட சில விடயங்களை 2022ஆம் ஆண்டு மேம்படுத்திக் கொண்டோம். 2022 ஐ விட 2023 எல்லா வகையிலும் மேம்படுத்திக் கொண்டோம். 2024. இது இன்னும் சிறப்பாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இந்தப் பாதையில் நாம் தொடர்ந்து பயணித்தால், 2025 இன்னும் சிறப்பாக இருக்கும்.

ஆனால் அதில் மாத்திரம் திருப்தி அடைய முடியுமா?

வெளிநாடுகள் மற்றும் வெளி வணிக தளங்களில் இருந்து பெற்ற எந்த கடனையும் நாங்கள் இன்னும் செலுத்தவில்லை. ஆனால் மறுசீரமைப்புக்குப் பிறகு நாம் கடனைச் செலுத்தத் தொடங்க வேண்டும். கடனை மீளச் செலுத்த ரூபாவைப் போன்று டொலர்களும் எம்மிடம் இருக்க வேண்டும்.

2023 செப்டெம்பர் மாத மளவில் மொத்தக் கடன் 91 பில்லியன் டொலர்களாக காணப்பட்டது. இந்த கடன்களை செலுத்த நீண்ட காலம் அவசியப்படும். அதற்காக நாம் தேசிய மட்டத்தில் வருமானம் ஈட்ட வேண்டும். இல்லாவிட்டால் நாம் மீண்டும் கடன் பிடிக்குள் சிக்கிக்கொள்வோம்.

கடன் மறுசீரமைப்பு காரணமாக வருடமொன்றிற்காக நாம் செலுத்த வேண்டிய தொகையை குறைத்துக் கொள்ள முடியும். ஆனாலும் நாம் வருடத்திற்கு 3 பில்லியன் டொலர்கள் வரையில் செலுத்த வேண்டியிருக்கும். இவ்வாறு தொடர்ந்து கடனில் சிக்கியிருக்க முடியாது. அதேபோல் கடன் பெறவும் முடியாது.

அதேபோல் எமது வரவு செலவுக்கு இடையிலான சமநிலையை உருவாக்குவதற்கான துரித முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். எமது வரவு – செலவுத் திட்ட துண்டுவிழும் தொகை பாரதூரமானது. இவ்வருடத்தில் 4,127 பில்லயன்களை அரசாங்கம் வருமானமாக ஈட்டியிருந்தாலும் அரசாங்கத்தின் செலவு 6,978 பில்லியன்களாக உள்ளது. அவற்றில் 2,651 பில்லியன்கள் கடனுக்கான வட்டியாக செலுத்துவதற்காகவே செலவிடப்படுகிறது. இதன்மூலம் எங்களின் கடன் சுமையை உணர முடியும்.

1950 ஆம் ஆண்டுக்குப் பிறகு, நாங்கள் தொடர்ந்து கடன் வாங்கிவந்துள்ளோம். எல்லாவற்றுக்கும் கடன் வாங்கியுள்ளோம். ஆட்சியாளர்களும் கடன் வாங்கப் பழகினர். மக்களும் இந்தக் கடன் பொருளாதாரத்துக்கு ஏற்றார்போல் இசைவாக்கமடைந்தனர். அரிசி இலவசமாக வழங்கப்படும், மின் கட்டணத்தில்

# ஆறாம் பக்கத் தொடர்ச்சி

சலுகைகள் வழங்கப்படும், சம்பளம் அதிகரிக்கப்படும், இலட்சக்கணக்கில் அரச வேலை வாய்ப்புகள் வழங்கப்படும். இவ்வாறான தேர்தல் வாக்குறுதிகளை அளித்து ஆட்சிக்கு வந்ததும் அவை கடன் பெற்று நிறைவேற்றப்பட்டன. இந்தக் கடன் மனப்பான்மையில் இருந்து விடுபட வேண்டும். கடன் பொருளாதாரத்தில் இருந்து விடுபடாவிட்டால் இந்த நாட்டிற்கு எதிர்காலம் இல்லை. எதிர்காலம் ஒன்று இல்லாமல் போகும்.

எனவே கடன் பொருளாதாரத்தில் இருந்து விடுபட்டு நமக்கான வலுவான பொருளாதாரத்தை உருவாக்க பாடுபட வேண்டும்.

இவற்றை அடைவதற்கு ஏற்றுமதி வருமானத்தையும், வெளிநாட்டு முதலீடுகளையும் விரைவாக அதிகரிப்பது இன்றியமையாதது. அதற்குத் தேவையான அடித்தளத்தை அமைத்து, பல பொருளாதார சீர்திருத்தங்களை தற்போது செயல்படுத்தி வருகிறோம். போட்டிப் பொருளாதாரத்தை உருவாக்குவதே எமது பிரதான எதிர்பார்ப்பாகும். அதேபோல் டிஜிட்டல் பொருளாதாரம், பசுமைப் பொருளாதாரத்தையும் உருவாக்க எதிர்பார்க்கிறோம்.ஊழலை ஒழித்தல் மற்றும் சமூக நவீன மயமாக்கல் என்பனவே இந்த செயல்முறையின் முக்கிய அம்சங்களாகும்.

இந்த நாட்டில் ஊழல் ஒரு சாபக்கேடாக மாறிவிட்டது என்பதை பலரும் ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால், முறைமையான சட்ட விதிகளால் மாத்திரமே ஊழலை ஒழிக்க முடியும் என்பதை பலர் உணரவில்லை. திருடர்கயைப் பிடியுங்கள் என்று கூச்சல் போடுவதால் மாத்திரம் திருடர்களைப் பிடிக்க முடியாது. திருடர்களைப் பிடிப்பதற்கு, வலுவான சட்ட விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகள் மற்றும் அறிவியல் முறைகள் தேவை. அவற்றை நடைமுறைப்படுத்தக்கூடிய பயிற்சி பெற்ற அதிகாரிகளும் தேவை.

ஊழல்வாதிகளை நீதியின் முன் நிறுத்தினால் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்று பலர் நினைக்கிறார்கள். இது ஒரு மாயை. ஊழலைத் தடுக்கவும் கடுமையான சட்ட விதிமுறைகளை உருவாக்க வேண்டும். மேலும் ஊழல்வாதிகள் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும். ஊழலை ஒழிக்க இந்த இரண்டு விடயங்களும் ஒன்றாக செயல்படுத்தப்பட வேண்டும்.

அதற்காக, ஊழல் தடுப்புச் சட்டத்தை நிறைவேற்றினோம். தற்போது சட்டம் அமுலுக்கு வந்துள்ளது. அத்தகைய சட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் நாங்கள் ஒருபோதும் அரசியல் அல்லது பிற அழுத்தங்களைப் பிரயோகிக்க மாட்டோம். அது தற்போது நாட்டின் முன் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பொருளாதார மற்றும் சமூக நவீன மயமாக்கலில் நாம் கவனம் செலுத்தும் சில முக்கிய விடயங்கள் குறித்தும் இந்த கௌரவ சபைக்கு வலியுறுத்த விரும்புகிறேன்.

சுற்றுலாத்துறையை எம்மால் எளிதாக அபிவிருத்தி செய்ய முடியும். அந்தத் துறையில் முன்னேற்றத்திற்கு தேவையான மனித மற்றும் பௌதீக வளங்களை மேம்படுத்தவும், நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுத்து வருகிறோம். இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை வருடத்திற்கு 5 மில்லியனாக அதிகரிப்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

நமது நாடு புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மூலங்கள் நிறைந்த நாடு. அந்த வாய்ப்பை நாம் சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். சர்வதேச தொழில்நுட்பத்தைப் பெற்று, நம் நாட்டில் புதுப்பிக்கத்தக்க வலுசக்தியை உற்பத்தி செய்தால், வலுசக்தி ஏற்றுமதி செய்யும் நாடாக அந்நியச் செலாவணியைப் பெறலாம்.

பசுமை ஹைட்ரஜன் மற்றும் பசுமை அமோனியா உற்பத்தியில் நாம் உயர்ந்த நிலையை அடைய வாய்ப்பு உள்ளது. இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கான ஆரம்ப கட்டத் திட்டங்கள் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளன.

காலநிலை மாற்றம் குறித்து நாம் ஏற்கனவே கவனம் செலுத்தி வருகிறோம். இது தொடர்பான ஆய்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக, இலங்கையில் காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கான அடிப்படை நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த காலத்தில் இருந்து தற்போது வரை விவசாயத்தில் ஈடுபட்டு வருகிறோம். பயிரிடுகின்றோம். ஆனால் இன்னும் காலாவதியான முறைகளையே பின்பற்றி வருகிறோம். பல தசாப்தங்களாக எந்த விவசாய நவீனமயமாக்கல் பணிகளையும் நாங்கள் முன்னெடுக்கவில்லை.

அடுத்த மூன்று, நான்கு போகங்களில் உலர் வலயத்தில் விவசாய நிலங்களின் உற்பத்தியை இரண்டு, மூன்று மடங்கினால் உயர்த்தும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறோம். அதற்கான கொள்கை ரீதியிலான முடிவுகளை நாங்கள் எடுத்துள்ளோம். இம்மாதம் முதல் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பிரதேச செயலகப் பிரிவு தெரிவு செய்யப்பட்டு இப்பணிகள் ஆரம்பிக்கப்படும். இவ்வாறு, உலர் வலயத்தில் விவசாயப் பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கும், ஈரவலயப் பகுதியில் உள்ள நிலத்தை ஏனைய வர்த்தகப் பயிர்களுக்குப் பயன்படுத்தவும் வாய்ப்புக் கிடைக்கின்றது.

எழுபதுகளில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் கீழ் கையகப்படுத்தப்பட்ட பயனுள்ள பல இலட்சம் ஏக்கர் நிலங்கள் தற்போது வீணாகிவிட்டன. சில நிலங்களில் உரிய பயனைப் பெறுவதில்லை. சில நிலங்கள் முற்றாகப் பயன்படுத்தப்படவில்லை. ஜனவசம, பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் போன்ற பல்வேறு அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான இந்தக் காணிகள் வீணாகி வருகின்றன. அது மாத்திரம் அல்ல. இந்த அரச நிறுவனங்களைப் பராமரிக்க பில்லியன் கணக்கான அரச பணம் செலவிடப்படுகிறது. இரு பக்கத்திலும் நாட்டிற்கு இழப்பு. பாரிய வீண்விரயம் இடம்பெறுகிறது.

இந்த நிலங்களிலிருந்து அதிகபட்ச உற்பத்தியைப் பெறுவதற்கு பயனுள்ள வேலைத் திட்டத்தை நாங்கள் தயாரித்துள்ளோம். இந்த நிலங்கள் உள்நாட்டுத் தொழில்முனைவோருக்கு ஏற்றுமதி வணிக பயிர்ச்செய்கைக்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்கப்படும்.

அவசியம் ஏற்பட்டால், அந்த தொழில் முனைவோர் வெளிநாட்டு தொழில்நுட்பம் மற்றும் முதலீட்டைப் பெற அனுமதியும் வழங்குவோம். முறையாகப் பயன்படுத்தப்படாமல் வீணாகப் போகும் நிலங்களை அந்நியச் செலாவணி ஊற்றுக்களாக மாற்றி பொருளாதார வளர்ச்சிக்கு வலுவாகப் பயன்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

கடந்த சுதந்திர தினத்திற்கு பிரதம அதிதியாக இங்கு வருகை தந்த தாய்லாந்து பிரதமர், தனது நாட்டில் முன்னெடுத்த விவசாய புரட்சி குறித்த விடயங்களைக் குறிப்பிட்டார். தாய்லாந்து பாரம்பரிய முறைகளில் சிறைப்பட்டிருக்காமல் நவீன தொழில்நுட்பத்தை சரியாகப் பயன்படுத்துவதால் விவசாயத்தின் மூலம் அதிக அளவில் அந்நியச் செலாவணியை ஈட்டுகிறது. அவற்றிலிருந்து நாமும் பாடம் கற்க வேண்டும். வெளிநாட்டு முதலீடுகள் குறித்து நாம் அதிக கவனம் செலுத்துகிறோம். நமது பொருளாதாரத்தை விரைவாக வலுப்படுத்த வெளிநாட்டு முதலீடுகள் ஊடாக பாரிய உந்து சக்தி கிடைக்கிறது. ஆனாலும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வரத் தயங்குகின்றனர்.

இலங்கையில் முதலீடு செய்வது ஒரு தலைவலி. பிரச்சினை. அனுமதி பெறுவதில் பல உத்தியோபூர்வ தடைகள் உள்ளன. அது மட்டும் அல்ல. சில தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு இலஞ்சம் கொடுக்க வேண்டியுள்ளது. அவை அனைத்திற்கும் முற்றுப்புள்ளி வைத்து, தற்போது வெளிநாட்டு முதலீட்டாளர்களை பாரிய அளவில் கவரும் வகையில் வேலைத் திட்டங்களை நாம் தற்போது தயாரித்துள்ளோம். ஒரு எளிய செயல்முறை மூலம் முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்குவதை இது சாத்தியமாக்குகிறது. இது ஊழலை மோசடிகளைத் தடுக்கிறது.

சீனா, வியாட்நாம் போன்ற நாடுகளில் முதலீடு செய்வதற்கான அனைத்து அனுமதிகளும் வசதிகளும் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள் ஒரே கூரையின் கீழ் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. நிலம் மட்டுமின்றி, மின்சாரம், நீர் வசதிகள், வீதிக் கட்டமைப்பும் மிக விரைவாக செய்து தரப்படுகிறது. பெரும்பாலான பணிகள் கணனி மூலம் செய்யப்படுவதால், சட்ட விரோத செயல்களுக்கு வாய்ப்பில்லை. இந்த அனைத்து விடயங்கள் மற்றும் சர்வதேச தரங்களின் அடிப்படையில், தற்போதைய தேவைகளுக்கு ஏற்ற வகையில் பொருளாதார ஆணைக்குழுவை அமைப்பதற்கான அடிப்படை பணிகள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. பரந்த அளவில் நடைமுறைப்படுத்தப்படும் பலவிதமான

# ஏழாம் பக்கத் தொடர்ச்சி

முதலீட்டு சட்டங்கள் மற்றும் திட்டங்கள் இந்த ஆணைக்குழு மூலம் செயல் படுத்தப்படும்.

அதேபோல் கல்வி, சுகாதாரம் போன்ற துறைகள் தொடர்பிலும் அவதானம் செலுத்த வேண்டும். இரண்டாம் உலகப் போர் காலத்திலேயே இலங்கையின் கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளின் அடிப்படை சட்டங்கள் உருவாக்கப்பட்டன. அக்காலத்தில் நாம் காலனித்துவ நாடாக இருந்தோம். அப்போது நாம் மிகவும் வறுமையான நாடாக இருந்தோம். எனவே, அத்தகைய சமூகத்திற்காக வடிவமைக்கப்பட்ட கல்வி மற்றும் சுகாதார நடைமுறைகளின் அடிப்படையில் நவீன உலகத்தை அணுகுவது சாத்தியமற்றது. இவற்றின் மூலம் 21ஆம் நூற்றாண்டின் சவால்களை சமாளிக்கவும் முடியாது.

அதனால் சர்வதேச அனுபவம், நடைமுறைகளின் அடிப்படையில், இரண்டு துறைகளுக்குமான புதிய அணுகுமுறைகள் மற்றும் புதிய சட்டத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். புதிய சூழலுக்கு ஏற்ற வகையில் மனித வளம் மேம்படுத்த வேண்டும். வறிய மற்றும் பாதிக்கப்படக்கூடிய பிரிவினரின் பாதுகாப்பிற்காக துரித நவீனமயமாக்கல் வேலைத் திட்டத்தை முன்னெடுக்க வேண்டும். விசேடமாக கல்வி மறுசீரமைப்புக்களை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

உலகின் எதிர்காலம் புதிய தொழில்நுட்ப அறிவின் மீதே தங்கியுள்ளது. தகவல் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு ஆகிய துறைகளில் திறன் மிக்க இளைய தலைமுறையை உருவாக்க வேண்டும். அதற்காகவே உயர்தரத்தில் சித்திபெறும் மாணவருக்குசெயற்கைக் நுண்ணறிவுக் கல்வியை வழங்குவதற்கான கொள்கையைத் தயாரித்து வருகிறோம். அதற்கான பல அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக் கழகங்களை நிறுவும் பணியை மேற்கொண்டு வருகிறோம். சாதாரண தரம், உயர்தரத்தில் சித்தி பெறாத அனைத்து மாணவர்களுக்கும் தொழிற்கல்லூரிகளை உருவாக்குவோம்.

புதிய அறிவு மற்றும் புதிய தொழில்நுட்பத் தெரிவுடன் கூடிய புதிய சந்ததியை உருவாக்குவதற்கு அவசியமான பின்னணியை நாம் ஏற்படுத்துவோம்.

அதேபோல் எமது நாடு ஒரு தீவாகும். அதற்கு உகந்த வகையிலான பாதுகாப்பை உறுதி செய்யும் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். நாட்டில் உள்ள அனைத்து பாதுகாப்பு வலையமைப்புக்களும் அதற்கேற்ப நவீனமயப்படுத்தப்பட்டு வருகின்றன. புலனாய்வு அமைப்புகள், பாதுகாப்பு உபகரணங்கள், பயிற்சி முறைகள், படையினர், இராணுவ உபகரணங்கள், மூலோபாய நடவடிக்கைகள் உள்ளிட்ட அனைத்துத் துறைகளையும், நாட்டில் ஏற்படக்கூடிய பல்வேறு சவால்களை எதிர்கொள்ளும் வகையில் தயார்படுத்தி வருகிறோம்.

நமது வெளிநாட்டு உறவுகளை மறுபரிசீலனை செய்ய வேண்டியது



காலத்தின் தேவையாகும். அதே போல் பூகோள அரசியல் நகர்வுகளின் மாற்றங்களுக்கு ஏற்ப பொருளாதார வாய்ப்புக்களைப் பெறும் வகையில், உரிய பலன்களைப் பெறும் வகையில் மறு சீரமைக்க வேண்டும். எனவே, அனைத்து நாடுகளுடனும் அணிசேராக் கொள்கை யுடனும் நட்புறவு அடிப்படையிலும் வெளிநாட்டு உறவுகளைத் பின்பற்ற வேண்டியது அவசியமாகும். அதற்கேற்ப நமது வெளியுறவுக் கொள்கைகள் காலோ சிதமானதாக மாற்ற வேண்டும்.

அதேபோல், பொருளாதார வாய்ப்புக்களை உருவாக்கிகொள்ள புதிய முறையிலான வெளிநாட்டுக் கொள்கைகளைப் பின்பற்ற வேண்டும். இதற்கமைய எமது வெளியுறவுக் கொள்கைகளை காலத்திற்கேற்ற வகையில் மறுசீரமைத்துக் கொள்வோம்.

நமது தயாரிப்புகள் வெளிநாட்டு சந்தைகளைச் சென்றடைவதற்கு அவசியமான அனுமதியை பெற்றுத் தரக்கூடிய வகையில் பொருளாதார உறவுகளை கட்டமைப்போம். அதற்காக பல நாடுகளுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களைக் கைசாத்திட ஆரம்பித்துள்ளோம். இதற்கமைய அண்மையில் தாய்லாந்துடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை செய்துகொண்டோம். இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்டுள்ள சுதந்திர வர்த்தக ஒப்பந்தம், முழுமையான பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தமாக விரிவுபடுத்தப்படும். சிங்கப்பூருடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் சீனா, இந்தோனேசியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளுடனும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களைக் கைசாத்திட எதிர்பார்த்துள்ளோம்.

அதேபோல் வலயத்தின் பரந்துபட்ட பொருளாதார கூட்டமைப்பில் இணையவுள்ளோம். அதேபோல் ஐரோப்பிய சங்கத்தின் வர்த்தகத்துக்கான பொது முறைகளுடன் தொடர்புகளை ஏற்படுத்துவோம்.

இவ்வாறு பல்வேறு துறைகளை நவீனப்படுத்துவதன் பலனாக நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்படும். நாட்டின் அனைத்துப் தரப்பினருக்கும் பலன்கள் கிடைக்கும் வகையில் வெற்றிகரமான திட்டத்தைச் செயல்படுத்தும் அதேநேரம் நல்லிணக்கமும் சமூக நீதியும் உறுதிப்படுத்தப்படும்.

நாங்கள் மற்றொரு விடயம் குறித்து கவனம் செலுத்துகிறோம். இன்று எமது பொருளாதாரம் கொழும்பு நகரையும் மேல் மாகாணத்தையும் மையமாகக் கொண்டுள்ளது. நாட்டின் 46 வீதமான பொருளாதாரம் மேல் மாகாணத்திலிருந்தே முன்னெடுக்கப்படுகிறது. இந்நிலை மாற வேண்டும். மேல் மாகாணத்திற்கு வெளியே பொருளாதாரம் விரிவுபடுத்தப்பட வேண்டும். யாழ்ப்பாணம், திருகோணமலை, பிங்கிரிய, ஹம்பாந்தோட்டை, கண்டி உள்ளிட்ட நகரங்களிலும் எமது பொருளாதாரத்தை விரிவுபடுத்துவதற்கான வேலைத் திட்டத்தை நாங்கள் நடைமுறைப்படுத்துகிறோம். தற்போதும் இந்தியாவுடன் இணைந்து திருகோணமலையை பொருளாதார மையமாக அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.

மேலும், ஒன்பது மாகாணங்களினதும் பொருளாதாரத்தைப் பலப்படுத்த அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படும். அரசியலமைப்பில் மாகாண சபை அதிகாரங்களின் மூன்றாவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாகாண சபைகளுக்கு சில அதிகாரங்களை உரிய வகையில் வழங்குவோம். தொழிற்கல்வி, விவசாயம் போன்ற துறைகளை உதாரணமாகக் கூறலாம். அதன் மூலம் ஒவ்வொரு மாகாணத்திலும் பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்த முடியும். மாகாணங்களுக்கு இடையில் பொருளாதாரப் போட்டித் தன்மையை உருவாக்குவதன் மூலம், ஒன்பது மாகாணங்களும் ஒரே நேரத்தில் அபிவிருத்திய டைவதற்கான வாய்ப்பு உருவாகும்.

எமது நாட்டின் புவியியல் அமைவிடத்தை மையப்படுத்தி உயரிய பலனை அடைந்துகொள்ள எதிர்பார்க்கிறோம். அதற்காக மூன்று துறைமுகங்களில் புதுவிதமான அபிவிருத்தியை ஏற்படுத்த முயற்சிக்கிறோம். அதனால் இந்து சமுத்திரத்தின் சேவை மத்தியஸ்தானமாகவும் பொருளாதார மத்திய நிலையமாக மாற்றுவதற்கும் எதிர்பார்க்கிறோம்.

அதற்கு புத்துயிர் அளிக்கும் வகையில் கொழும்பு துறைமுக நகரத்தை விசேட நிதி வலயமாக பிரகடனப்படுத்துவோம். அதற்குள் வெளிநாட்டு நிதி செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு அவசியமான சட்டத்திட்டங்களை உருவாக்குவோம்.

# எட்டாம் பக்கத் தொடர்ச்சி

எமது நாட்டின் தேசிய வளம் எமது இளம் சமூகத்தினர் என்பதை அடிக்கடி நினைவுகூறுகிறேன். அந்த வளத்தைப் பாதுகப்பது எமது ஒருமித்த நோக்கமாகும். இளம் சமூகத்தின் பாதுகாப்பு நாட்டின் பாதுகாப்பிற்கு நிகரானதாகும். கடந்த காலங்களில் இளம் சமூனத்தினர் நாட்டை விட்டுச் சென்றனர். அந்த நிலை தற்போதும் உள்ளது. அதனால் எமது இளம் சமூகத்தினருக்கு சுபீட்சமான எதிர்காலத்தை உருவாக்க வேண்டும். அதனை செய்ய வேண்டிய பொறுப்பு நம் அனைவரையும் சார்ந்துள்ளது.

இந்த பொருளாதார நெருக்கடிக்கு அரசியல் தீர்வுகள் இல்லை. பொருளாதார ரீதியான தீர்வே உள்ளது. அறிவியல் தீர்வை தேட வேண்டும். அதனைவிடுத்து சில அரசியல் குழுக்கள் பழைய அரசியல் தீர்வுகளை கூறி பிரசித்தமடைய முயற்சிப்பது கவலைக்குரியதாகும்.

இவ்விடத்திலிருந்து முன்னேறிச் செல்வதற்கு புதிய வலுவான பொருளாதாரத்திற்கு நாம் மாற வேண்டும். அதற்கான பொருளாதார மாற்றச் சட்டம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்படும். அதற்குரிய புதிய நிறுவனத்தையும் உருவாக்க வேண்டும்.

அரசியல் அபிலாஷைகளை மனத்தில் வைத்துக்கொண்டு, தேர்தலில் பெறும் வாக்குகளை இலக்காகக் கொண்டு, நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை வழங்கி அல்லது வீண்கதை பேசி எம்மால் முன்நோக்கிச் செல்ல முடியாது. மாறாக எதிர்காலச் சந்ததியின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கான வேலைத் திட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

இந்த மாற்றத்தைக் குறுகிய காலத்தில் செய்துவிட முடியாது. அதற்காக நீண்ட கால முயற்சியும் அர்ப்பணிப்பும் அவசியப்படும். அதே பாதையில் தொடர்ந்து சென்றால் 2048 ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த நாடாக மாறலாம். எந்த நெருக்கடிக்கும் குறுகிய கால தீர்வுகள் இல்லை. இரண்டு நாட்களில் எந்த இலக்கையும் அடைய முடியாது.

புத்த பெருமான் ஞானம் பெறுவதற்காக மிக நீண்டகாலம் ஆனது. ஞானம் பெற்ற பின்னரும் அவர் பல்வேறு கஷ்டங்களை எதிர்கொள்ள நேரிட்டது. அதனைப் புரிந்து கொண்டு நாம் நிதானமாகவும் திட்டமிடலுடனும் முன்னேறிச் செல்ல வேண்டும்.

ஆரம்பத்தில் புத்தரின் பிரசங்கம் ஒன்றைக் கூறினேன். புத்தரின் பிரசங்கத்திற்குப் பல ஆண்டுகளுக்குப் பிறகு, கிறிஸ்துவுக்கு முந்தைய ஐநூறாம் ஆண்டுகளில் சீனாவில் வாழ்ந்த தத்துவ ஞானி கன்பூசியஸ் என்பவர்" உலகைக் கட்டியெழுப்ப முதலில் தேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். தேசத்தை கட்டியெழுப்புவதற்கு முன் குடும்பத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.

குடும்பத்தைக் கட்டியெழுப்பும் முன்னதாக எமது தனிப்பட்ட வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். தனிப்பட்ட வாழ்க்கையைக் கட்டியெழுப்புவதற்கு முன்னதாக எமது மனதைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும்." என்று கூறியுள்ளார்.

எனவே, இந்த சபையில் உள்ள அனைவரும் முதலில் மனதைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். எதிர்காலத்தில் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்க, அவர்களுக்கான சிறந்த நாட்டைக் கட்டியெழுப்ப, நாம் அனைவரும் சரியான பாதையில் செல்ல வேண்டும். அதற்காக நம் மனதைத் தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும்.

நாம் அனைவரும் ஒன்றிணைந்து இந்த சவாலை ஒற்றுமையுடன் எதிர்கொண்டால் மட்டுமே நமது பயணத்தைத் துரிதப்படுத்த முடியும். தமக்குக் கிடைக்கும் அந்தஸ்த்துகள் பற்றி கனவு காணும் சிலர், அந்த நாட்டை விடவும் பதவிகளை அதிகமாக நேசிக்கின்றனர். அந்த பதவிகளுக்காக நாட்டுக்குப் பொய்யான வாக்குறுதிகளை வழங்குகின்றனர். நாட்டையும் மக்களையும் ஏமாற்றுகின்றனர். நடைமுறையை உணராமல் கனவுப் பாதையில் செல்ல முற்படும் பட்சத்தில் அனர்த்தங்களை எதிர்கொள்ள நேரிடும்.

நாட்டைக் கட்டியெழுப்பும் கனவை நனவாக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டுமென மீண்டும் கேட்டுக் கொள்கின்றேன். அதற்காக ஒற்றுமையாக கலந்துரையாடுவோம். நாங்கள் செயல்படுத்தும் முறையை விட சிறந்த மாற்று முறைகள் இருந்தால், அவற்றைக் கூறுங்கள். அவற்றை ஆழமாகப் ஆராய்வோம். அது குறித்தும் கலந்துரையாடுவோம். அவற்றில் நாட்டுக்குச் சிறந்தென கருதப்படும் யோசனையைச் செயற்படுத்துவோம். அவ்வாறான பேச்சுக்களில் கலந்துகொள்ள நாம் தயாராகவே இருக்கிறோம். அவ்வாறான பேச்சுக்களுக்குக்கு தயார் எனில், அந்தக் கலந்துரையாடல்களுக்கு சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி ஆகியவற்றின் பிரதானிகளையும் அழைப்பிக்க முடியும்.

கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகள் தொடர்பில் இரு உதாரணங்களைக் கூற விரும்புகிறேன்.

19 ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவின் எழுத்தாளரும் பேச்சாளருமான எலன் கெல்லர் "தனியாக நாம் சில விடயங்களை மட்டுமே செய்ய முடியும். ஒன்று பட்டால் பல விடயங்களை செய்யலாம்."

19 ஆம் நூற்றாண்டில் மகாகவி பாரதியார் தனது நாடு பற்றி எழுதிய கவிதையொன்று நினைவிற்கு வருகிறது. அதனை சிங்களத்தில் மொழி பெயர்த்தவர் பேராசிரியர் சுனில் ஆரியரத்ன

"முப்பது கோடி முகமுடையாள்
உயிர் மொய்ம்புற ஒன்றுடையாள்
இவள் செப்பு மொழிபதி னெட்டுடையாள்
எனில் சிந்தனை ஒன்றுடையாள்"

அவ்வாறான எண்ணம் எமக்கு ஏன் வரவில்லை? பல்வேறு எண்ணங்கள் இருந்தாலும் பல்வேறு இனங்களைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், பல்வேறு பகுதிகளில் வாழ்ந்தாலும், பல்வேறு பிரச்சினைகள், நம்பிக்கைகள் இருந்தாலும், பல்வேறு அரசியல் கட்சிகளுக்கு ஆதரவாக இருந்தாலும், எமது நாட்டிற்காகவும் அதன் எதிர்காலத்திற்காகவும் ஒருமித்த எண்ணத்துடன் ஒன்றுபட முடியாமல் இருப்பது ஏன்? எமது நாட்டு இளைய சமூகத்தின் எதிர்காலத்திற்காக ஒன்றுபட முடியாதிருப்பது ஏன்?

மீண்டும் – மீண்டும் உங்களுக்கு அழைப்பு விடுக்கிறேன். பொது நோக்கத்துடன் ஒன்றுபடுங்கள். மாற்றத்தை நம்மிலிருந்து ஆரம்பிப்போம். எமக்கு நாமே ஒளியாவோம்.

இந்தச் சபையைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அரசியல் கட்சிகளில் பல தசாப்தங்களாக என்னை விமர்ச்சித்தவர்களே ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் உள்ள னர். நாட்டின் நன்மைக்காகவும், இளையோரின் எதிர்காலத்திற்காகவும் பொதுஜன பெரமுனவின் பெரும்பாளான வர்கள் பழைய பகையை மறந்துவிட்டு ஒன்றுபட்டுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியில் இருப்பவர்கள் என்னுடன் பல காலமாக அரசியலில் ஈடுபட்டவர்கள். நான் அரசியலுக்கு அறிமுகப்படுத்தியவர்களும் உள்ளனர். நாட்டுக்கான பொது பயணத்தில் இணைந்துகொள்ள பொதுஜன பெரமுனவால் முடியுமாயின் ஐக்கிய மக்கள் சக்தியால் அதனை செய்ய முடியாதிருப்பது ஏன்?

மக்கள் விடுதலை முன்னணி நல்லாட்சி அரசின் காலத்தில் எம்முடன் நெருக்கமாக செயற்பட்டது. ஊழல் ஒழிப்பு பிரிவின் அலுவலகத்திற்கு ஆனந்த விஜயபாலவின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டது. அவ்வாறிருக்க நாட்டின் பொது முன்னேற்றத்திற்கான பயணத்தில் இணைய முடியாதிருப்பது ஏன்?

இந்தச் சபையில் உள்ள தமிழ், முஸ்லிம் கட்சிகள் என்னுடன் இணைந்து பணியாற்றியுள்ளன. எனினும், நாட்டிற்காக இந்தக் கட்சிகளுக்கு பொதுப் பயணத்தில் ஏன் இணைந்துகொள்ள முடியாது.

நாம் தேர்தலில் வெவ்வேறாக போட்டியிடுவோம். ஆனால் நாட்டின் முன்னேற்றத்திற்கான முயற்சிகளில் இணைந்துகொள்வோம்.

அதனால் நாட்டை முன்னேற்ற பொது நிலைப்பாட்டுடன் – பொதுவான எண்ணத்துடன் ஒன்றுபட முன்வாருங்கள் என மீண்டும் அழைப்பு விடுக்கிறேன். மாற்றத்தை எம்மிலிருந்து ஆரம்பிப்போம். எமது மனங்களைத் திருத்திக்கொள்வோம். எமக்கு நாமே ஒளியாவோம். நாம் புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்குவோம். தனிப்பட்ட நோக்கங்களுக்காக அன்றி நாட்டின் பொதுக் கனவை நனவாக்க ஒன்றுபடுவோம். அடுத்த சந்ததியின் முன்னேற்றத்திற்காக ஒன்றுபடுவோம். எம்மீது சாட்டப்பட்டிருக்கும் பொறுப்புக்களை நாம் நிறைவேற்றுவோம். பல்வேறு தனிப்பட்ட நோக்கங்களுக்காக, இந்த பொறுப்புக்களைப் புறக்கணித்தால் வரலாற்றில் நாம் துரோகிகளாக அடையாளப்படுத்தப்படுவோம். அதனால் புதிய பயணத்தைத் தொடர்வோம். புதிய எதிர்காலத்தை, புதிய நாட்டை உருவாக்குவோம். வாருங்கள் ஒன்றுபட்டு நாம் புதிய நாட்டைக் கட்டியெழுப்புவோம்!" – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## ரணில் குறிப்பிட மறந்த விடயம்

நமது அரசியல்வாதிகளிடமும், தலைவர்களிடமும் ஒரு பண்பு இருக்கின்றது. தங்களுக்கு அனுகூலமான விடயங்களை மறக்க மாட்டார்கள். நினைவில் வைத்திருப்பார்கள். அடிக்கடி நினைவூட்டவும் செய்வார்கள். ஆனால், தங்களுக்குப் பிரதி அனுகூலமான விடயங்களை அடியோடு மறந்து போய் விடுவார்கள்.

இன்று ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத் தொடரை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் தனது அரசின் கொள்கை விளக்கங்கள் அடங்கிய சிம்மாசன உரையில் நாட்டின் பொருளாதார செயற்பாடுகள் தொடர்பாக கவனம் செலுத்தினார், ஆனால் அந்த நெருக்கடி நிலைமை ஏற்பட்டமைக்கான பிரதான காரணங்களை குறிப்பிட அவர் தவறிவிட்டார். மறந்துவிட்டார். அல்லது தவிர்த்துக் கொண்டார்.

'நோய்நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்'

- என்றான் திருநாப் போதகன் செந்நாப் புலவன் திருவள்ளுவன்.

நோய் என்ன? நோய்க்குக் காரணம் என்ன? நோய் தீர்க்கும் வழி என்ன? இவற்றை முறையாக ஆராய்ந்து சிகிச்சை செய்ய வேண்டும் என்பதே இந்தக் குறளின் பொருள்.

நோயின் மூலத்தைக் கண்டுபிடித்து, அந்த மூலத்திற்குச் சிகிச்சை செய்வதுதான் உரிய - சரியான - வழிமுறை.

பொருளாதார நெருக்கடி எனும் மோசமான நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் இலங்கைத் தீவுக்கு சிகிச்சை அளிக்கப் புறப்பட்டிருக்கும் நாட்டின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அந்த நோயின் மூலத்திற்குத்தான் முதலில் சிகிச்சை செய்ய வேண்டும். நோயின் விளைவுகளுக்கோ குணங்குறிகளுக்கோ அல்ல.

ஆனால், நோயின் மூலத்தைக் கவனியாது விட்டு விட்டு, அது ஏற்படுத்தும் குணங்குறிகளுக்குச் சிகிச்சை செய்ய முயல்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

இலங்கைத் தீவு பொருளாதாரப் பின்னடைவு என்ற மோசமான - மீள முடியாத - நோய்க்குள் மூழ்கியமைக்கான பிரதான - மூல - காரணம் யாது என்பது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நன்கு தெரியும். அவரே அதனைப் பல தடவைகள் வெளிப்படையாகக் கூறி வந்திருக்கிறார்.

ஆனால், இப்போது பொருளாதார நெருக்கடி என்ற நோய்க்குச் சிகிச்சை அளிக்கும் போது - அது குறித்துப் பேசும் போது - இந்த நெருக்கடிக்கான மூல காரணத்தைக் குறிப்பிடுகின்றமையை அவர் மறந்துவிட்டார். அல்லது தவிர்த்து விட்டார். அது இன்றைய நிலையில் தமது அரசியலுக்குப் பிரதியனுகூலமான விடயம் என்பதால் அதனைத் தமக்கு சாதகமான முறையில் அவர் மறந்து போனார்.

இந்த நாட்டில் - அது காலனித்துவ ஆட்சியிடம் இருந்து விடுதலை பெற்றதாகக் கூறப்படும் இந்த 76 ஆண்டுகளில் - மிக மோசமடைந்து சென்ற தேசிய இனப் பிரச்சினைக்கு நின்று, நீடித்து, நிலைக்கக் கூடிய, நிரந்தர தீர்வு ஒன்றைக் காணாதமையே நாட்டின் இன்றைய இழிநிலைமைக்குக் காரணம்.

அதனாலேயே இந்த நாடு இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடும் மிக மோசமான யுத்தத்தில் சிக்கி, முப்பது ஆண்டு காலம் பேரவலப்பட்டது. அந்த யுத்தமும், அது ஏற்படுத்திய மோசமான விளைவுகளுமே இன்றைய பொருளாதார நெருக்கடியின் மூலகாரணம்.

அதனை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தாமே நேரடியாகவும் வெளிப்படையாகவும் பல தடவைகள் கூறி வந்திருக்கின்றார்.

இப்போது பொருளாதார நெருக்கடிக்கான தீர்வு குறித்துப் பேசும் அவர் இந்த விவகாரத்தைத் தீர்க்கும் விடயத்தில் ஒன்றுபட்டுச் செயற்பட முன்வருமாறு சகல கட்சிகளினதும் தலைவர்களையும் மக்களையும் அழைக்கின்றார்.

நல்லது. ஆனால் இந்தப் பொருளாதார நெருக்கடிக்கு மூல காரணமாக அமைந்த தேசிய இனப் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கு ஒன்றுபட்டு வாருங்கள் என்று அழைக்கவோ அல்லது அதற்காக முயற்சிக்கவோ அவர் எத்தனிக்கவே இல்லை. அதற்கு அவர் தயார் இல்லை. அதனை அவர் இப்போது விரும்பவில்லை.

இது தேர்தல் நெருங்கும் சமயம். தொடர்ந்து நிறைவேற்றதிகார ஜனாதிபதி பதவியில் நீடிக்க ஆசைப்படும் அவர், அதற்காக வரும் தேர்தலில் வெற்றி பெற வேண்டிய கட்டாயத்தில் உள்ளார்.

தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு என்ற பல்லவியை ஆரம்பித்தால் தமது தேர்தல் வெற்றி வாய்ப்பு அடிபட்டு போய்விடும் என்று எண்ணும் அவர் அதன் காரணமாக அந்தப் பிரதான விடயத்தை மறந்து போனவராகத் தன்னை வெளிப்படுத்துகிறார்.

தமக்குப் பிரதியனுகூலமான விடயங்களை மறந்து விடுவதுதானே அரசியலில் முக்கியமானது! அந்த அரசியலுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் விதிவிலக்கு அல்லர்...!



# இலங்கையர் ஐவர் தமிழகத்தில் தஞ்சம்

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

இலங்கையில் தொடரும் பொருளாதார நெருக்கடியால் 3 குழந்தைகள் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 தமிழர்கள் தமிழகத்தி தஞ்சமடைந்துள்ளனர்.

வவுனியாவைச் சேர்ந்த நந்தகுமார், அவரது மனைவி நித்யா மற்றும் அவரது 3 குழந்தைகள் நேற்று மாலை மன்னாரில் இருந்து ஒன்றரை இலட்சம் ரூபா கொடுத்து பைப்பர் படகில் புறப்பட்டுள்ளனர். அவர்கள் இன்று அதிகாலை இராமேஸ்வரம் அடுத்துள்ள தனுஷ்கோடி அரிச்சல்முனை முதலாம் மணல் திட்டில் கடற்கரையில் இறங்கியுள்ளனர்.







தகவல் அறிந்த இராமேஸ்வரம் மரைன் பொலிஸார், இலங்கைத் தமிழர்களை மீட்டு மண்டபம் மரைன் பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

பாதுகாப்பு வட்டார அதிகாரிகளின் விசாரணைக்குப் பின்னர் 5 பேரும் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

# கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்தவர் கீழே தவறி வீழ்ந்து பரிதாப உயிரிழப்பு

யாழ்ப்பாணத்தில் கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளி ஒருவர் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இளவாலை பகுதியைச் சேர்ந்த சூசை சுதர்சன் (வயது 38) எனும் நபரே உயிரிழந்துள்ளார்.

அவர் கொக்குவில் பகுதியில் இடம் பெற்று வரும் கட்டுமானப் பணியின் போது, இரண்டாம் மாடியில் வேலை



செய்து கொண்டிருந்த வேளை கீழே தவறி வீழ்ந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சக தொழிலாளிகள் அவரை மீட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற வேளை அவர் உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் அறிக்கையிட்டனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.





# இந்த நாடு அழிந்து போயுள்ளமைக்கு பொருளாதார பயங்கரவாதமே காரணம்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

பொருளாதார பயங்கரவாதத்தாலேயே இந்த நாடு அழிந்தது. ஒரு குடும்பத்தை மையமாகக் கொண்ட நட்பு வட்டார அரசியலால் பொருளாதார பயங்கரவாதம் தலை விரித்தாடுகிறது. இதன் மூலம் நாடு மக்களின் வளங்களையும் உடமைகளையும் இழந்தது. கொள்ளையில் ஈடுபட்ட அனைவரும் வெளிப்படைத் தன்மையுடனும், பாரபட்ச மின்றியும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு, இழந்த வளங்கள் மீண்டும் மீட்கப்பட்டு நாட்டின் கல்வி மற்றும் சுகாதாரத்துக்காகப் பயன்படுத்தப்படும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப நிகழ்ச்சித் திட்டத்தின் 82 ஆவது கட்டமாக,அக்மீமன இஹலகொட ஸ்ரீ சுமங்கலா மாதிரி கல்லூரி 10 லட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களை வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை (03) இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

வளங்களும் வருமானங்களும் சமனாக பகிர்ந்து செல்லும், இனம், மதம், சாதி, வர்க்கம், குலம், கட்சி, அந்தஸ்து என்ற பேதமின்றி நாம் கைகோர்த்து வளமான சௌபாக்கியமான தேசத்தை உருவாக்குவோம்.

சமூகத்தின் அனைத்து மக்களுக்கும் நலன் கிட்டும், நலன் பகிர்ந்தளிக்கப்படும். புதிய வளமான நாட்டைக் கட்டியெழுப்ப நாம் அனைவரும் கைகோர்ப்போம். இதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராக உள்ளது. நாட்டு மக்கள் இந்த பயணத்துக்குத் தயாராக உள்ளீர்களா.

ஜப்பானை அதிக கடன் சுமை கொண்டிருந்த நாடு என்று சொல்லலாம். அந்தக் கடனை எடுத்து இலாபகரமான முதலீடுகளை செய்தனர். ஜப்பான் கடன் எடுத்து கப்பல்கள் வருகை தராத துறைமுகங்கள், விமானங்கள் வருகை தராத விமான நிலையங்கள், கிரிக்கெட் இல்லாத கிரிக்கெட் மைதானங்கள், மாநாடுகள் நடக்காத மாநாட்டு மண்டபங்கள், பெயர் பதிப்பதற்காக தாமரை கோபுரங்களை நிர்மாணிக்க வில்லை.

அவர்கள் தாம் பெற்ற கடனைச் செலுத்த முடியுமான நாட்டுக்கு நீடித்த அடைவுகளை பெற்றுத் தரும் ஏற்றுமதி சார்ந்த தொழிற்சாலைகளையே நிறுவினர்.

எமது நாடும் யுத்ததுக்கு முகம் கொடுத்து அதிலிருந்து விடுதலை பெற்ற ஓர் நாடாகும். வியட்நாமும் யுத்தத்தை சந்தித்த நாடாகும். வியட்நாமியப் படைகள் மற்றும் அவர்களின் கொரில்லா கூட்டாளிகளான வியட் காங் ஆகிய தரப்புகளிடம் அமெரிக்கா படைகள் தோல்வியடைந்தது.உலகின் மிக சக்திவாய்ந்த இராணுவ சக்தி படைத்த ஒரு நாடு, வியட்நாமிய கிளர்ச்சியாளர்களிடமும், வறிய தென்கிழக்காசிய தேசத்திடமும் அடிபணிந்தது. 1975 ஆம் ஆண்டு வியட்நாமை விட்டுச் செல்லும் நிலைக்கு அமெரிக்கா படைகள் தள்ளப் பட்டன.

எமது நாட்டில் திறந்த பொருளாதார கொள்கை 1970 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.1986 இல் வியட்நாமும் திறந்த பொருளாதாரத்தை அறிமுகப்படுத்தியது.எமக்கு பின்னர் திறந்த பொருளாதாரத்துக்குள் நுளைந்த வியட்நாம் இன்று கோடிக்கணக்கான நேரடி முதலீடுகளை பெற்று வருகிறது. எனது நினைவின் படி, வருடத்துக்குப் 12 அல்லது 13 பில்லியன் அமெரிக்க டொலர்களை நேரடி அந்நிய முதலீடாக பெற்று வருகிறது.

எமது நாடும் கட்டியெழுப்பப்பட வேண்டுமாக இருந்தால், வெற்று வீராப்பு பேசும் போது கரகோஷம் எழுப்பும் அரசியலில் இருந்து விடுபட்டு அடைவுகளைப் பெற்றுத் தரும் செயற்பாடுகளுக்குள் பிரவேசிக்க வேண்டும்.

எமது ஆட்சியில் இதன் முதற்கட்டமாக நாட்டிலுள்ள அரச பாடசாலைகளை ஸ்மார்ட் பாடசாலைகளாக மாற்றுவோம்.

களவும், திருட்டும், மோசடியும், ஊழலும் எமது நாட்டில் இல்லாமல் இருந்தால் எமது நாட்டுக்கு உதவ பல வெளிநாட்டவர்கள் மட்டுமன்றி இலங்கையர்கள் பலரும் இருக்கின்றனர்.



ஐக்கிய மக்கள் சக்தி அமைக்கும் அரசின் கீழ், நாட்டில் உள்ள தூதுவர்களின் பணிகளோடு மாதாந்தம் முன்னெடுக்க வேண்டிய பணிகளோடு இந்த கருமங்களும் உள்ளடக்கப்படும். அவ்வாறு செய்யாத தூதுவர்கள் பதவி நீக்கம் செய்யப்படுவார்கள். நாட்டு மக்களின் உயிருடன் விளையாட எவருக்கும் இடமளிக்கப்பட மாட்டாது.

நாட்டில் முன்னுரிமை வழங்கப் பட வேண்டிய விடயங்களை நாம் அடையாளப்படுத்த வேண்டும். என்றாலும் அவ்வாறானதொன்று நடப்பதாக தெரியவில்லை.-என்றார்.



# ஆபத்தான மரக் கிளைகள் அகற்றப்பட்டு வருகின்றன

(தலவாக்கலை நிருபர்)

கொத்மலை பிரதேசத்தில் அரச நிறுவனங்கள் மற்றும் மக்கள் நடமாடும் இடங்களுக்கு அருகாமையில் காணப்படும் ஆபத்தான மரங்களின் கிளைகள் அகற்றப்பட்டு வருகின்றன.

இந்த வேலைத் திட்டத்தை கொத்மலை உள்ளூராட்சி சபை தற்போது முன்னெடுத்து வருகின்றது. அதன்படி கொத்மலை கல்வி காரியாலயத்துக்கு அருகாமையில் காணப்பட்ட மரங்கள் மற்றும் கொத்மலை வாரச்சந்தை பகுதியில் அபாயகரமான நிலையில் காணப்பட்ட மரங்களின் கிளைகளை அகற்றுவதற்கு கொத்மலை பிரதேச சபை ஊழியர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# புலமை பரிசில் கொடுப்பனவு மாணவர்களுக்கு வழங்கல்

(எம்.எப்.றிபாஸ்)

சம்மாந்துறை வளத்தாப்பிட்டி இஸ்மாயில் புரம் தாஹிரா வித்தியாலயல மாணவர்களுக்கு புலமை பரிசில் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

பாடாசாலை அதிபர் எம்.ஆர். எம்.முஸ்தபா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பாடசாலையால் தெரிவு செய்யப்பட்ட பதினைந்து மாணவர்களுக்கு புலமைப் பரிசில் தொகையை வழங்கினர்.

சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறபாத் மொகைடீன், ஒய்வுபெற்ற கிராமசேவை உத்தியோகத்தர் முகம்மட் தம்பி, ஆசிரியர்கள், மாணவர்கள், உட்பட பலரும் கலந்து கொண்டனர்.








# பாடசாலையில் அழகுபடுத்தும் திட்டம்

(எம்.எம்.றம்ஸீன்)

கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தை அழகுபடுத்தும் வேலை திட்டத்துக்கு அமைவாக உள்ளக மைதானம் செப்பனிடும் வேலைகள் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றன.

பாடசாலை அதிபர் ஏ.ஜி.எம்.றிசாத்தின் வேண்டுகோளுக்கு இணங்க கல்முனை மாநகர சபையின் உதவி யுடன் வேலை திட்டம் இடம்பெற்றது.

இதில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பெற்றோர் பங்கேற்றனர்.




# சுயாதீன ஊடகவியலாளர் போரத்தின் இரத்ததானம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

காத்தான்குடி சுயாதீன ஊடகவி யலாளர் போரத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் அல் அமீன் மகா வித்தியாலயத்தில் இடம்பெற் றது.

அமைப்பின் தலைவர் எம்.எச். எம்.அன்வர் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் காத்தான்கு தள வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம்.எஸ்.எம். ஜாபிர் மற்றும் இரத்த வங்கி பொறுப் பதிகாரி டாக்டர் அலீமா றகுமான், ஆய்வுக்கும் மேம்பாட்டுக்குமான அமைப்பின் தலைவி அனீசா பிர்தெளஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



இரத்ததான முகாமில் 115 பேர் குருதிக் கொடை செய்தனர்.



# சாய்ந்தமருதில் பல்லூடக ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் திறந்து வைப்பு

**(எம்.ஏ.ஏ.அக்தார், நூருல் ஹுதா உமர்)**

சுதந்திர தினத்தன்று சாய்ந்தமருது அல் ஜலால் வித்தியாலயத்தில் பல்லூடக ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் மாணவர்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டு உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கல்வி உதவி அமைப்பின் தலைவர் றிஸ்லி முஸ்தபா அவர்கள் கலந்து கொண்டார்.இந்த நிகழ்வில் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய அதிகாரி மற்றும் பாடசாலையின் அதிபர், பிரதி அதிபர், ஆசிரிய ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.



# ‘உரிமை’ வேலைத்திட்டத்தில் சம்மாந்துறை மண் முதலிடம்

**(சர்ஜூன் லாபீர்)**

ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்கவின் எண்ணத்தில் உருவான உரிமை தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் அரச காணிகளை நிபந்தனையற்ற ரீதியில் சுதந்திரமான முறையில் பூரண உரிமையாக அளிப்பு வழங்கும் நிகழ்வில் அகில இலங்கை ரீதியாக சம்மாந்துறை பிரதேசம் முதலிடம் பெற்றுள்ளது என்று சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம் ஹனீபா தெரிவித்துள்ளார்.

சம்மாந்துறை பிரதேச செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட நாட்டின் 76 ஆவது சுதந்திர தின நிகழ்வில் சிறப்பு சொற்பொழிவு நிகழ்த்தும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

பிரதேச ரீதியாக அகில இலங்கை ரீதியில் ஆகக் கூடுதலான பூரண உறுதி அளிப்பாக காணப்படுகின்றது.

இதன் மூலமாக எமது சமூகமும் குறிப்பாகச் சிறுபான்மைச் சமூகமும் எடுத்துக் கொள்ள வேண்டிய விடயம் யாதெனில், அரசு மற்றும் அரச அதிகாரிகள் எமது சமூகத்துக்கான உரிமையை வழங்குவதற்குத் தயார் நிலையில் இருக்கின்றார்கள் என்பதுதான்.-என்றார்.





# மட்டு. சமூக நலன்புரி அமைப்பால் மாணவர்களுக்குச் சைக்கிள்கள்!

(பழுவூரான்)

சமூக நலன்புரி அமைப்பினரால் கடந்த வெள்ளிக்கிழமை (02) 30 மாணவர்களுக்குப் புதுக்குடியிருப்பு விவேகானந்தர் தொழில்நுட்ப இல்லத்தில் வைத்துச் சைக்கிள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

பின்தங்கிய கிராமப் பகுதிகளில் இருந்து தொலைதூரம் கால்நடையாகப் பாடசாலைக்குச் செல்லும் தந்தையை இழந்த மாணவர்களுக்கே இவை வழங்கப்பட்டன. சமூக நலன்புரி அமைப்பிற்கு கிடைக்கும் வேண்டுகோளுக்கு அமைவாக அதன் நன்கொடையாளர்களால் தொடர்ச்சியாக மாணவர்களுக்கான துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

இதனடிப்படையில் இதுவரை 16 லட்சம் ரூபாய் செலவில் 37 மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன என்று சமூக நலன்புரி அமைப்பின் இணைப்பாளர் திருமதி. சிவசுந்தரி பிரபாகரன் தெரிவித்தார்.

# கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸவின் வழிகாட்டலில் ஐக்கிய மக்கள் சக்தியின் பசறை தொகுதி அமைப்பாளர் லெட்சுமனார் சஞ்சய் றேகு ஊடாக "கல்விக்கு கரம் கொடுப்போம்" எனும் தொனிப்பொருளில் பசறை தொகுதியில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுர்களுக்கு பசறை வாசிகசாலை மண்டபத்தில் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

பசறை தொகுதியில் கற்றல் உபகரணங்கள் தேவைப்பாடுகள் காணப்படும் ஆரம்பக் கல்வி மாணவர்களை இணங்கண்டு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பசறை பிரதேச சபை முன்னாள் தலைவர், பிரதேச சபை உறுப்பினர்கள், நலன் விரும்பிகள், பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துக்கொண்டனர்.



# பாலமுனை இளைஞர் சபையின் ஏற்பாட்டில் கண் பரிசோதனை!

(எம்.எம்.றம்ஸீன்)

பாலமுனை இளைஞர்கள் சபையின் ஏற்பாட்டில் எம்.பி.எஸ். அனுசரணையில் இலவச கண்பரிசோதனை முகாம் சபையின் தலைவர் ஆசிரியர் ஏ.எல்.எம்.சீத் தலைமையில் பாலமுனை அல்ஹிதாயா மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

இதன்போது பாலமுனை ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் செயலாளர் எம்.எஸ்.எம்.அன்சார் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டு வைத்திய முகாமை ஆரம்பித்து வைத்தார்.

இதில் சபையின் ஆலோசகர்களான தென்கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி ஏ.எச்..றிபாஸ், பொறியியலாளர் எம்.எச்.நௌசாட், இளைஞர் சேவை உத்தியோகத்தர் பீ.எம்.றியாத், ஏ.எல்.எம்.றனீஸ், கலாச்சார உத்தியோகத்தர் எம்.எம்.நௌசாத் , அமைப்பாளர் எம்.ஏ.சிபான், உப தலைவர் எம்.எச்.றுஹைமி அஹமட், நிர்வாக உறுப்பினர் ஏ.ஆர்.சிஹாப் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.



# தொழுநோய் தினத்தை முன்னிட்டு வளத்தாப்பிட்டியில் நடமாடும் சேவை

(நூருல் ஹுதா உமர்)

உலக தொழுநோய் தினத்தை முன்னிட்டு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் ஏற்பாடு செய்யப்பட்ட நடமாடும் வைத்திய சேவை சம்மாந்துறை வளத்தாப்பிட்டி பிரதேசத்தில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீன் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய தொற்றுநோய் தடுப்பு பிரிவு குறித்த நடமாடும் வைத்திய சேவையை ஏற்பாடு செய்திருந்தது.

பிராந்திய தொற்றுநோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ.சீ.எம்.பஸால் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிராந்திய சுற்றுச்சூழல், தொழில்சார் சுகாதாரம் மற்றும் உணவு பாதுகாப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எஸ்.எம்.பௌஸாத், சம்மாந்துறை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.ஐ.எம்.கபீர், உதவி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி ஜீவராணி சிவசுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டனர். இவர்கள் பொது மக்களுக்குச் சிகிச்சை அளித்ததுடன் நோய் தொடர்பாக வைத்திய ஆலோசனைகளையும் வழங்கினர்.

இந்த நிகழ்வில் ஏ.டி.ரி. அமைப்பினரும் பிராந்திய மேற்பார்வை சுகாதார பரிசோதகருமான ஐ.எல். லபீர் மற்றும் ஜீ.சுகந்தன் ஆகியோரும் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் சுகாதார பரிசோதகர்களும் கலந்து கொண்டனர்.



# தென்கிழக்குப் பல்கலையின் 16 ஆவது பட்டமளிப்பு விழா!

**(கே.ஏ. ஹமீட், )**

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 16 ஆவது பட்டமளிப்பு விழா எதிர்வரும் 10 மற்றும் 11ஆம் திகதிகளில் பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் நடைபெறவுள்ளது என்று உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

பட்டமளிப்பு விழா தொடர்பில் – நேற்று (07) பிற்பகல் பல்கலைக்கழக பிரதான சபை மண்டபத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு பேசிய போது, அவர் இதனைக் கூறினார்.

பட்டமளிப்பு விழா, ஒவ்வொரு நாளிலும் தலா மூன்று அமர்வுகளாக நடைபெறும். மொத்தமாக 2 ஆயிரத்து 152 பேருக்கு, இதன்போது பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

"முதலாம் நாளின் முதலாவது அமர்வில் கலை கலாசார பீடத்தைச் சேர்ந்த 342 பேரும், இரண்டாவது அமர்வில் இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீடத்தைச் சேர்ந்த 355 பேரும் மூன்றாவது அமர்வில் பிரயோக விஞ்ஞான பீடம், பொறியியல் பீடம் மற்றும் தொழில்நுட்ப பீடம் ஆகிய வற்றைச் சேர்ந்த 430 பேரும் – பட்டம் பெற உள்ளனர்" என, உபவேந்தர் கூறினார்.

இரண்டாம் நாளில் இடம்பெறவுள்ள நான்காவது அமர்வில் முகாமைத்துவ வர்த்தக பீடத்தை சேர்ந்த 314 பேரும், ஐந்தாவது அமர்வில் கலை கலாசார பீடத்தை சேர்ந்த வெளிவாரி மாணவர்கள் 350 பேரும் ஆறாவது அமர்வில் முகாமைத்துவ பீடங்களைச் சேர்ந்த வெளிவாரி மாணவர்கள் 361 பேரும் பட்டங்கள் பெறவுள்ளனர்.

இதனடிப்படையில் மொத்தமாக ஆயிரத்து 441 உள்வாரி மாணவர்களும், 711 வெளிவாரி மாணவர்களுமாக மொத்தம் 2152 பேருக்கு – இந்த விழாவில் பட்டங்கள் வழங்கப்பட உள்ளன.

இந்தப் பட்டமளிப்பு விழா – தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கரின் நெறிப்படுத்தலில், பல்கலைக்கழக வேந்தர் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா தலைமையில் நடைபெறவுள்ளது.

பட்டமளிப்பு விழாவின் பிரதம அதிதியாக அமெரிக்காவின் இலங்கைக்கான முழுநிலா ஆணையகத்தைச் சேர்ந்த பெட்ரிக் மெக்னமாறா மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பிரதித் தலைவரும் சிரேஷ்ட பேராசிரியருமான சந்தன உடவத்த ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொழிநுட்ப பீடத்தால் பரிந்துரைக்கப்பட்ட மொறட்டுவ பல்கலைக்கழக பேராசிரியர் பியசிறி பட்டமளிப்பு விழாவின் போது, கௌரவ கலாநிதி பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளார்.

இதேவேளை முதல்தடவையாக பல்கலைக்கழகத்தின் இணையத்தளத்தினூடாக இந்தப் பட்டமளிப்பு விழா – நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படவுள்ளது என்று உபவேந்தர் றமீஸ் தெரிவித்தார்.

இதற்கென விஷேடமாக வடிவமைக்கப்பட்ட இணையத்தள பக்கமும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

இதற்கான ஊடக சந்திப்பில் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கருடன் இணைந்து பட்டமளிப்பு விழாக் குழுத் தலைவர் பேராசிரியர் எம்.பி.எம். இஸ்மாயில், பதில் பதிவாளர் எம்.ஐ.எம். நௌபர், ஊடக பிரிவு இணைப்பாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் எப்.எச்.ஏ. ஷிப்லி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




# ஏழாவது முறையாக இரத்ததானம் வழங்கினர் 'பீட்' அமைப்பினர்!

(எம்.எம்.றம்ஸீன்)

பிரதேச வைத்தியசாலைகளில் நிலவும் குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் மாவனெல்ல, அரநாயக்க திப்பிட்டியிலுள்ள 'பீட்' அமைப்பினால் ஏழாவது முறையாக இரத்ததான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

'பீட்' அமைப்பின் தலைவர் எஸ். எம். எம். மர்சூக் ஹாஜியார் தலைமையில் அஷ்ரப் ஞாபகார்த்த மண்டபத்தில் இது நடைப்பெற்றது.

இதன் போது குருதிக் கொடையாளிகள் 161 பேர் இரத்ததானம் வழங்கினர்.





# கல்முனை நெனசலவில் நடந்த தொழில் வழிகாட்டல் செயலமர்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை கே.டி.எம்.சி. நெனசல, கல்வி நிறுவனத்தின் ஏற்பாட்டில் உயர் கல்வி வழிகாட்டல் மற்றும் திறன் மேம்படுத்தல் சம்பந்தமான செயலமர்வு நெனசல கல்வி நிறுவன மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்தச் செயலமர்வில் வளவாளராக என்.ரீ.சி லங்கா கெம்பஸ் நிறுவனத்தின் உயர் அதிகாரியும் விரிவுரையாளருமான எம்.வை.எம்.வை. இம்றான் கலந்து கொண்டு இளைஞர் யுவதிகளுக்கு கல்வியின் முக்கியத்துவம் மற்றும் எதிர்கால கல்வி மற்றும் தொழில நுட்பங்கள் பற்றி விரிவுரையாற்றினார்.

மேலும் கே.டி.எம்.சி. நெனசல கல்முனை கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் எஸ்.எம். ஹாஜா, கல்வியின் தற்போதைய நிலை, தொழில் வழிகாட்டல், எதிர்கால இளைஞர்களின் சிந்தனை, தனியார் கல்வியின் அனுகூலம் என பல விடயங்களைப் பகிர்ந்து கொண்டார்.

இந்தச் செயலமர்வில் நிறுவத்தின் உயர்அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டார்கள்.

இந் நிகழ்வின் இறுதியில் சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டது.



தொகுப்பு:
பைஷல் இஸ்மாயில்

# வயதுப் பெண்களை பாதிக்கும் ‘முகப்பரு’ பாதுகாப்பு பெற சில வழிகள்!

இளம் வயதினரை அதிகம் பாதிக்கக் கூடியது முகப்பருவாகும். இது பெண்களுக்கு அதிகம் ஏற்படும். பெரும்பாலும் விடலைப் பருவத்தை அடைகின்றவர்களுக்கு இது ஏற்படுகிறது. இதனைப் போக்க எண்ணற்ற முக கிரீம்களும், மருந்துகளும் இன்று அதிக விளம்பரத்துடன் வெளிவருகின்றன. ஆனால், அவற்றை வாங்கி இவர்கள் பயன்படுத்தும் முன், எதனால் இது ஏற்படுகிறது என்ற காரணத்தை தெரிந்து கொள்வது நல்லது.

**முகப்பரு எப்படி ஏற்படும்?**

தோலில், அதன் மேற்பரப்பு ஈரப்பசையுடன் இருக்க ‘சரும மெழுகு சுரப்பிகள்’ உள்ளன.

இவை சரும மெழுகை உற்பத்தி செய்யும். இதில் பல்வேறு கொழுப்பு அமிலங்களும் அடங்கி இருக்கும். இவை தோலை மிருதுவாகவும், பசையுடனும் இருக்க உதவுகின்றன. சாதாரணமாக இது சுரக்குமளவு அதிகரித்தாலும், தோல் துளை மூடிக்கொண்டு விட்டாலும் ‘முகப்பரு’ எளிதில் ஏற்பட்டுவிடும். ‘முடி’ உள்ள இடங்களில் இது போன்ற நிலை ஏற்படுவதில்லை.

**எங்கெல்லாம் தோன்றும்?**

பெரும்பாலும் இது முகத்தில் தோன்றும். என்றாலும் கழுத்து, நெஞ்சின் முன்பகுதி, தோள்பட்டையின் பின்புறம் ஆகிய இடங்களிலும் இது ஏற்படலாம். சிலருக்கு இது தொடையிலும் குதப்பகுதியிலும் தோன்றும்.

**தோலில் தோன்றும் மாற்றங்கள்**

முதலில் இந்தப் பருக்கள் தொடங்கும் போது அவை சிறிய வெண்ணிறமான முகடு கொண்ட பருக்களாக தோன்றும். இதில் சரும மெழுகும், தோலடி செல்களும், செதில்களும் கலந்திருக்கும். இவை தோலின் துளையை அடைத்துத் தோலுக்கு வெளியே சிறிதாக நீட்டிக் கொண்டிருக்கும்.

அதன் பிறகு, வெண்ணிற முகடு கொண்ட பருக்களிலுள்ள ‘சல்பர்’ என்ற பொருள் ‘சல்பைட்டு’ என்ற பொருளாக மாறிவிடும். இதன் காரணமாக வெண்ணிற முகடு கொண்ட பருக்கள் கரிய முகடுகளாக மாறிவிடும். இந்த நிலையில் இவற்றை பிதுக்கி வெளியேற்றினால் இவை வெளியே வரும். அதன் உட்பகுதியில் மஞ்சள் நிறமான வெண்ணெய் வெளிப்படும்.

இவற்றை விட்டு விட்டால் நீண்ட காலமாக இவை எவ்வித மாற்றமும் இல்லாமல் இருக்கும். இந்த பருக்களைச் சுற்றி செந்தடிப்புத் தோன்றும். பிறகு அந்த இடத்தில் சிறிய வட்ட வடிவ கொப்பளங்கள் தோன்றும். வெண்ணிறப் பருக்களின் முகடுகள் ‘ரோஜா’ சிவப்பாக மாறலாம்.

இவை பிற நுண்கிருமிகளின் பாதிப்பால், பழுத்து, ‘சீழ்’ ஏற்படலாம். உட்பகுதியிலுள்ள சீழ் கட்டியாகி, அவை தோலில் தடிப்பான கட்டிகளாகவும், கொப்பளங்களாகவும் தோன்றலாம். சில பகுதிகள் கன்னிப்போய் தோலையும் பாதிக்கும். குறிப்பாக இவற்றை கிள்ளி எடுக்கிறேன் என்று பிதுக்கும்போது தோல் பாதிக்கப்படும். இவ்வாறு அடிக்கடி ஓரிடத்தில் பருக்களைக் கிள்ளும்போது அந்த இடத்தில் அவற்றின் ‘வடுக்கள்’ தோன்றி முக அழகைப் பாதிக்கும். சிலருக்கு, முகடுகள் வெளியே வந்த பின்பு கூட குழி குழியாகத் தோலின் பகுதியில் விழுந்து அது விகாரத்தை ஏற்படுத்தும்.

மேற்கூறிய பாதிப்புகள் கொஞ்சம், கொஞ்சமாகவும், படிப்படியாகவும் தோன்றிவரும். சிலருக்கு ஒரே நேரத்தில் மேற்கூறிய பல்வேறு அமைப்புகளுமே தோலில் ஏற்படவும் செய்யும்.

முகப்பரு தொந்தரவு ஒரே நாளில் தோன்றி முடியக் கூடிய விடயம் அல்ல. அது நீண்ட நாள்கள் வந்தவர்களுக்கு தொந்தரவுகளை ஏற்படுத்தும். பெண்களுக்குக் குறிப்பாக, ‘மாதவிடாய்’ தொடங்குவதற்கு முன்பாக இவை அதிகரிக்கும். விடலைப் பருவத்தில் அதிகமாக தோன்றினாலும் 20 வயதை நெருங்குகின்றபோது இதன் பாதிப்புக் கொஞ்சம், கொஞ்சமாகக் குறைந்து வரும். முகத்தைக் குறிப்பாக யுவதிகளின் முகத்தைப் பாதித்து அவர்களின் மனநிலையையும் இது பெரிதும் பாதித்து விடுகிறது.

முகப்பருக்களில் பல்வேறு வகைகள் இருக்கின்றன. அதாவது,

**மழலைகளுக்கு வரும் முகப்பரு**

மழலைகளுக்கும், சிறுவர், சிறுமியர்களுக்கும் தோன்றும் முகப்பரு. இவர்களுக்குப் பெரும்பாலும் வெண்முகடு கொண்ட பருக்கள் முகத்தில் தோன்றும். இவர்களுக்கு அவை பழுக்காது கொப்பளங்களாகவும் உருவாகாது. பிறந்தவுடன் தாயின் ஹோர்மோனின் அளவு இவர்களது

தொடர்ச்சி ▼

# வயதுப் பெண்களை பாதிக்கும் ‘முகப்பரு’ பாதுகாப்பு பெற சில வழிகள்!

தொடர்ச்சி ▲

உடலில் மிகுந்திருப்பதே இதற்கான காரணம் என்று கண்டறியப்பட்டுள்ளது. மேலும், மிகவும் அடர்த்தியான எண்ணெய்யை இவர்களது மென்மையான தோலில் (தலையிலும், முகத்திலும்) தடவுவதாலும் இது ஏற்படலாம்.

**வயது முதிர்ந்தவர்களுக்கு ஏற்படும் முகப்பரு**

வயதானவர்களுக்கு, தனித்தனியாகவோ, மொத்தமாகவோ, முகப்பருக்கள் தோன்றலாம். இவை பெரும்பாலும் தலையின் பக்கவாட்டிலும், கண்களைச் சுற்றி அமைந்துள்ள பகுதியிலும் ஏற்படும்.

**பெரியவர்களுக்கு ஏற்படும் முகப்பரு**

இது முகத்திலும், உடலின் பிற பகுதிகளிலும் ஏற்படலாம். சாதாரணமாக தொடங்கி பல்வேறு நிலைகளிலும் இது பாதிப்புகளை ஏற்படுத்தலாம்.

**குறிப்பிட்ட வேலை பார்ப்பவர்களுக்கு ஏற்படும் முகப்பரு**

பல்வேறு இரசாயனத் தொழிற்சாலைகளில் பணி புரிபவர்களுக்கு முகப்பரு தோன்றுவதுண்டு. குறிப்பாக, குளோரின், எண்ணெய் போன்றவற்றில் பணி புரிபவர்களுக்கு முகத்திலும், உடலின் பல்வேறு பகுதிகளிலும் பருக்கள் தோன்றலாம்.

இதுபோன்று, பல்வேறு நாட்டு மருந்துகளை தலைக்கும், முகத்துக்கும் போடுவதாலும் முகப்பருக்கள் தோன்றலாம். சிலருக்கு முகத்தில் கொப்பளங்களும் ஏற்படும்.

மருந்துகளால் ஏற்படும் முகப்பரு

அயோடைட்ஸ், புரோமைட்ஸ் போன்ற மருந்துகளைப் பயன்படுத்துகின்றபோதும் முகப்பருக்கள் தோன்றலாம். இவை தோன்றும் பகுதிகளில் அரிப்பும் இருக்கும். ஆனால் இவை பெரிதாகி கட்டிகளாக மாறுவதில்லை.

பல்வேறு ஹோர்மோன் மருந்துகள் மற்றும் ‘ஸ்டிராய்டு’ மருந்துகளாலும் முகத்தில் பருக்கள் தோன்றும்.

குறிப்பாக ‘டெஸ்டோஸ்டிரான்’ எனப்படும் ஆணின ஹோர்மோன் மருந்தை ‘மார்பக புற்றுநோய்க்காக’ பெண்கள் பயன்படுத்துகின்றபோதும், ‘ஸ்டிராய்டு வகை மருந்துகளை ‘மூட்டு வாதத்துக்காகப் பயன்படுத்துகின்ற போதும் பெண்களுக்கு முகப்பருக்கள் தோன்றும்.

**முகப்பரு ஏற்படுவதற்கான காரணங்கள்**

முகப்பருக்கள் பெரும்பாலும் பருவமடைகின்ற போது தான் அதிகமாக ஏற்படுகிறது. இதற்கு அந்த நேரத்தில் தோன்றும் ‘ஹோர்மோன்களே’ காரணமெனக் கருதப்படுகிறது. குறிப்பாக, ஆணின ஹோர்மோன் ‘டெஸ்டோஸ்டிரான்’ மற்றும் பெண்ணின ஹார்மோன் ‘புரோஜஸ்டிரான்’ ஆகியவற்றின் செயற்பாட்டால் முகப்பருக்கள் அதிகமாக ஏற்படுகின்றன. இவை சரும (மெழுகு) எண்ணெய் சுரப்பிகளைப் பெரிதாக்கி விடுகின்றன. இதனால் அவர்களுக்கு அதிகமாக முகப்பருக்கள் ஏற்படும்.

தலையில் ‘பொடுகின்’ தொந்தரவுகள் உள்ளவர்களுக்கும் ‘முகப்பரு’ ஏற்படும். உணவில் அதிகமான அளவு மாப் பொருள்கள், கொழுப்புச் சத்துப் பொருள்கள் ஆகியவற்றை சாப்பிடுகின்றவர்களுக்கு இது அதிகமாக ஏற்படும்.

மலச்சிக்கல் உடையவர்களுக்கும், உணவக் குழல் ஜீரண பாகங்களில் முறைகேடுகள் உள்ளவர்களுக்கும் இது அதிகமாக ஏற்படும்.

உடற்பயிற்சி செய்யாதவர்களுக்கும் வேலைப் பளு அதிகமாக இல்லாதவர்களுக்கும் இது அதிகமாக ஏற்படும்.

முகத்துக்கு அதிகமாக எண்ணெய் பசை நிறைந்த கிரீம்களைத் தடவுவதாலும் முகத்தை அடிக்கடி தேய்ப்பதாலும் இது ஏற்படும்.

**முகப்பருவுக்கான சிகிச்சைகள்**

பொது சுகாதாரம் – இந்தப் பாதிப்புடைய பெண்கள் கடுமையாக வேதனைப்படுவார்கள். அய்யோ முகமே போச்சே என்று வருத்தப்படுவார்கள். முதலில் இதைப்



போக்கவேண்டுமென வருத்தத்தாலும், அவர்களின் மன இறுக்கத்தாலுமே முகப்பருக்கள் அதிகரிக்கலாம்.

முகத்தை அடிக்கடி கழுவி சுத்தமாக வைத்திருக்க வேண்டும். உடலின் பொது ஆரோக்கியத்தை மேம்படுத்த வேண்டும்.

விட்டமின் “ஏ” சிகிச்சை – விட்டமின் “ஏ” தோலில் ஏற்படும் மாற்றங்களைத் தடுத்து நிறுத்தக் கூடியது என்று கருதப்படுவதால் இதனை தினமும் தொடர்ந்து பல வாரங்கள் எடுக்க வேண்டும்.

ஹோர்மோன் சிகிச்சை – மோசமாக முகம் பாதிக்கப்பட்டிருந்தால் சிலருக்கு இஸ்டிரோஜீன் ஹோர்மோனை தினமும் ஒரு மில்லி கிராம் என்றளவில் பெண்கள் எடுக்க வேண்டும். இது மாதவிடாய்க்கு முன்பாக ஏற்படும் முகப்பருக்களைத் தடுக்கும்.

ஆணின் ஹோர்மோனுக்கு எதிராக செயற்படக் கூடிய சைபிரோஸ்டிரோன் அஸிட்டேட் என்ற மருந்தை ஆண் பெண் இருவருக்கும் கொடுக்கலாம். கர்ப்பத்தடை மாத்திரைகளும் முகப்பருவை போக்க உதவும்.

**முகப்பரு வராமல் எப்படித் தடுக்கலாம்?**

இது ஒருவரிடமிருந்து மற்றவருக்கு பரவக்கூடியது அல்ல. எனவே, இது குறித்து கவலைப்படத் தேவையில்லை. இவர்கள் சில பொதுவான முன் யோசனைகளை கையாளுவது மிகவும் அவசியமாகும்.

இவர்களுக்கு நல்ல காற்றோட்டமான இடம் மிகவும் அவசியமாகும். மிதமான சூரியஒளி இவர்களுக்கு நல்லது.

திறந்த வெளியில் உடற்பயிற்சி செய்வது எளிமையான உணவுகளை உண்பது நல்லது. இவர்கள் உணவில் அதிகளவு பச்சை காய்கறிகளையும், பழங்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். கொழுப்பான உணவுகள், மா உணவுகள், பல்வேறு போத்தலில் விற்கப்படும் பானங்கள், கோப்பி, மது ஆகியவற்றை தவிர்த்துவிட வேண்டும். மலச்சிக்கல் இருப்பவர்கள் இதனைத் தவிர்க்க வேண்டும், முகத்தில் கண்ட கண்ட கிரீம்களை தடவக்கூடாது, தலையில் பொடுகுத் தொந்தரவு இருந்தால் அற்கான சிகிச்சையினை முறையாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

தினமும் பலமுறை முகத்தை வெதுவெதுப்பான நீரில் சோப்பிட்டு கழுவ வேண்டும், மலை நேரத்தில் முகத்தை ஸ்பொஞ் வைத்து ஸ்பிரிட்டால் துடைக்க வேண்டும். இரவு நேரத்தில் முகத்தில் கிரீம் போட்டுக்கொள்ளலாம்.

**வைத்தியர் முத்து செல்வகுமார்,**
**பொது மருத்துவர்.**



# மட்டக்களப்பில் உலக உணவுத் திட்டத்தால் விவசாய மேம்பாட்டுக்கு உதவித் திட்டங்கள்!

(பழுவூரான்)

உலக உணவுத் திட்டத்தின் வீட்டுத் தோட்ட முறைமையின் ஊடாக பாடசாலை மாணவர்களுக்கு போசாக்கான உணவை வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

இதன்கீழ் வர்த்தக, வாணிப இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தலைமையில் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட 16 ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கு உலக உணவு திட்டத்தின் அனுசரணையில் உணவு வழங்குனர்களுக்கான உபகரணங்கள் ஏறாவூர்பற்று பிரதேச செயலக வளாகத்தில் வைத்து நேற்று சனிக்கிழமை (03) வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

ஏறாவூர்பற்று பிரதேச செயலாளர் எஸ்.தனபால சுந்தரத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் கலந்து கொண்டு பயனாளிகளுக்கான உபகரணங்களை வழங்கினார்.

உலக உணவுத் திட்டத்தின் மூலம் ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு போசாக்கான சமைத்த உணவுகளை வழங்கும் வழங்குனர்களை ஊக்குவிப்பதற்கான செயற்றிட்டமாக இத்திட்டம் அமைந்துள்ளது.

இதன் போது 20 நபர்களுக்கு வீட்டுத் தோட்டத்தில் உற்பத்தி செய்தற்கான விதை பொருள்கள் மற்றும் கோழி வளப்புக்கான உபகரணங்கள், கோழிகளுக்கான உணவு, மருத்துவப் பொருள்கள் என்பன வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் மாவட்ட செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்களான ஆர். ஜதிஸ்குமார், நிர்மலராஜ், ஏறாவூர்பற்று பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஆ.சுதாகரன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# கல்முனை சுகாதாரப் பணிமனையில் சாரதிகள் ஓய்வெடுக்க தனி இடவசதி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் கடமைபுரியும் சாரதிகளின் நலன்கருதி அவர்கள் ஓய்வெடுப்பதற்கும், அவர்களின் அலுவலக பணிகளை முன்னெடுப்பதற்கும் தனியான இடவசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பணிமனையின் சாரதிகள் நீண்ட காலமாக எதிர்நோக்கி வந்த பிரச்சினைகள் தொடர்பில் பணிப்பாளரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகீலா இஸ்ஸடீன் சாரதிகளின் நலன் கருதித் தனியான இடவசதி ஒன்றை ஒழுங்குபடுத்தி வழங்குமாறு சம்மந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு உத்தரவிட்டிருந்தார்.

அதற்கிணங்க சாரதிகளுக்கான ஓய்வறை சாரதிகள் சங்கத்தால் அங்கு ராரப்பணம் செய்து வைக்கப்பட்டது.





# மக்கள் சேவைக்கு யார் வந்தாலும் மகிழ்ச்சி: விஜய் குறித்து முதல்வர் ஸ்டாலின் கருத்து

"மக்களுக்குத் தொண்டாற்ற யார் வந்தாலும் நான் மகிழ்ச்சி அடைவேன்."

– இவ்வாறு தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

ஸ்பெயினில் உத்தியோகபூர்வ பயணத்தை முடித்துவிட்டு இன்று முதல்வர் ஸ்டாலின் சென்னை திரும்பினார்.

இதன்போது செய்தியாளர்களை சந்தித்த அவரிடம், நடிகர் விஜய் தொடங்கியுள்ள அரசியல் கட்சி தொடர்பாக கேள்வி கேட்கப்பட்டது.

இதற்கு பதிலளித்த அவர், "மக்களுக்குத் தொண்டாற்ற யார் வந்தாலும் நான் மகிழ்ச்சி அடைவேன்." – என்றார்.

# அரசியல் ஆதாயத்தை எதிர்பார்த்து மக்களுக்கு பணி செய்தது இல்லை

## நடிகர் விஷால் அறிக்கை



"நான் எப்போதும் அரசியல் ஆதாயத்தை எதிர்பார்த்து மக்கள் பணி செய்தது இல்லை, 'நன்றி மறப்பது நன்றன்று' என்ற வள்ளுவனின் வாக்குப்படி என்னால் முடிந்த உதவிகளை செய்துக்கொண்டே தான் இருப்பேன். அது என்னோட கடமை என்று மனரீதியாக நான் கருதுகிறேன்"

– இவ்வாறு நடிகர் விஷால் தெரிவித்துள்ளார்.

நடிகர் விஜய் எப்போது அரசியல் கட்சி தொடங்குவார் என அவரது ரசிகர்கள் பல ஆண்டுகளாக காத்திருந்தனர். இந்நிலையில், தற்போது, 'தமிழக வெற்றி கழகம்' என்ற கட்சியைத் தொடங்கி, அதைத் தேர்தல் ஆணையத்தில் பதிவும் செய்திருப்பதாக அதிகாரபூர்வமாக அறிவித்திருக்கிறார் விஜய்.

நடிகர் விஜயை தொடர்ந்து நடிகர் விஷால் அரசியல் கட்சி தொடங்கப்போகிறார் என பரவலாக பேசப்பட்டது.

இந்நிலையில், "மக்கள் நல இயக்கத்தின் மூலம் நான் செய்து வரும் மக்கள் பணிகளை தொடர்ந்து செய்வேன்" என நடிகர் விஷால் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில், "சமூகத்தில் எனக்கு இத்தனை ஆண்டுகளாக ஒரு நடிகனாக, சமூக சேவகனாக உங்களில் ஒருவனாக அந்தஸ்தும் அங்கீகாரமும் அளித்த தமிழக மக்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளேன்.

என்னால் முடிந்த உதவிகளை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் ஆரம்ப காலத்தில் இருந்தே என்னுடைய ரசிகர் மன்றத்தை ஒரு சராசரி மன்றமாய் கருதாமல் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று எண்ணினேன், "இயன்றதை செய்வோம் இல்லாதவர்களுக்கு" என்ற நோக்கத்தில் நற்பணி இயக்கமாக செயல்படுத்தினோம்.

அடுத்த கட்டமாக மக்களின் முன்னேற்றத்துக்காக மக்கள் நல இயக்கத்தை உருவாக்கி மாவட்டம், தொகுதி, கிளை வாரியாக மக்கள் பணி செய்வதுடன், என் தாயார் பெயரில் இயங்கும் 'தேவி அறக்கட்டளை' மூலம் அனைவரும் கல்வி கற்க மறைந்த முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமின் பெயரில் வருடந்தோறும் பல எண்ணற்ற ஏழை எளிய மாணவ, மாணவியர்களை படிக்க உதவி வருகிறோம் மற்றும் பாதிக்கப்பட்ட விவசாய தோழர்களுக்கு உதவிகளை செய்து வருகிறோம்.

அதுமட்டுமின்றி படப்பிடிப்பிற்காக நான் செல்லும் பல இடங்களில் மக்களை சந்தித்து அவர்களின் அடிப்படைத் தேவைகளையும் குறைகளையும் கேட்டறிந்து அவர்களின் கோரிக்கைளையும் என் மக்கள் நல இயக்கம் மூலம் செய்து வருகிறேன். நான் எப்போதும் அரசியல் ஆதாயத்தை எதிர்பார்த்து மக்கள் பணி செய்தது இல்லை, "நன்றி மறப்பது நன்றன்று" என்ற வள்ளுவனின் வாக்குப்படி என்னால் முடிந்த உதவிகளை நாள் செய்துக்கொண்டே தான் இருப்பேன். அது என்னோட கடமை என்று மனரீதியாக நான் கருதுகிறேன்.

தற்போது மக்கள் நல இயக்கத்தின் மூலம் நான் செய்து வரும் மக்கள் பணிகளை தொடர்ந்து செய்வேன். வரும் காலகட்டத்தில் இயற்கை வேறு ஏதேனும் முடிவு எடுக்க வைத்தால் அப்போது மக்களுக்காக மக்களின் ஒருவனாக குரல் கொடுக்க தயங்க மாட்டேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# மக்களவைத் தேர்தலின் கூட்டணி தொடர்பில் இறுதி முடிவெடுக்க பிரேமலதாவுக்கே அதிகாரம்

## தே.மு.தி.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் தீர்மானம்

மக்களவைத் தேர்தல் கூட்டணி தொடர்பாக முடிவெடுக்க பிரேமலதாவுக்கு அனைத்து அதிகாரங்களை வழங்கியும், விஜயகாந்த் மறைவுக்கு இரங்கல் தெரிவித்த அரசியல் தலைவர்களுக்கும், அஞ்சலி செலுத்திய அனைவருக்கும் நன்றி தெரிவித்து தீர்மானம் உள்ளிட்ட 10 தீர்மானங்கள் இன்று நடைபெற்ற தே.மு.தி.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

சென்னை கோயம்பேட்டில் உள்ள தலைமை அலுவலகத்தில் இன்று தே.மு.தி.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் இடம்பெற்றது. அதில் மக்களைவைத் தேர்தல் கூட்டணி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. அதன் பிறகு 10 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதன்போது, தமிழகத்தில் ஒரு மாற்றம் வேண்டும் அதன் மூலம் ஒரு நல்லாட்சியை தர வேண்டும் என்று உழைத்து தமிழக மக்களுக்காக தன்னை முழுவதும் அர்ப்பணித்து இந்த மண்ணை விட்டு மறைந்தாலும் என்றைக்கும் அனைத்து நெஞ்சத்தில் வாழ்கின்ற தே.மு.தி.க. நிறுவனத் தலைவர் விஜயகாந்த் மறைவு வாழ்வில் ஈடு செய்ய முடியாதது. அவருக்கும் சமீபத்தில் மறைந்த கழகத்தினருக்கும் இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.



அத்துடன், விஜயகாந்துக்கு இந்தியாவின் உயரிய விருதான பத்மபூஷன் விருதை அறிவித்த பிரதமருக்கும்., மத்திய அரசுக்கும் இந்த கூட் டத்தில் நன்றி தெரிவிக்கப்பட்டது. விஜயகாந்த் மறைவுக்கு இரங்கல் தெரிவித்த அரசியல் தலைவர் களுக்கு, அஞ்சலி செலுத்திய அனைவருக்கும் நன்றி தெரி வித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தே.மு.தி.க. இதுவரைக்கும் எந்த கட்சியுடனும் கூட்டணி குறித்து மறைமுகமாகவோ, அதிகாரபூர்வ மாகவோ பேசவில்லை. ஊடகங்களில் வரும் செய்திகள் யூகமாகவே கருதப்படுகிறது.

மாவட்ட கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகளின் கருத்துக்களை கேட்டு கூட்டணி குறித்து பேச குழு அமைத்திடவும், கூட்டணி குறித்து இறுதி முடிவெடுக்கும் முழு அதிகாரத்தை கழக பொதுச் செயலாளர் பிரேமலதாவுக்கு வழங்கி இந்த கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



# இலங்கைத் தமிழர்களுக்காக தமிழகத்தில் வீடுகள் கையளிப்பு

தமிழ்நாட்டில் வெவ்வேறு பகுதிகளில் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ள இலங்கைத் தமிழர்களுக்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகள் நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளன.

தமிழ் நாட்டில் அகதி முகாமில் உள்ள இலங்கை தமிழர்களுக்காக புதுக்கோட்டை – தேக்காட்டூர் பகுதியில் புதிதாக 58 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

தமிழக சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி உள்ளிட்டோர் நேற்று அதனை திறந்து வைத்துள்ளனர்.

சுமார் 3.56 கோடி இந்திய ரூபா நிதி ஒதுக்கீட்டில் இந்த வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

அதேநேரம் எட்டயபுரம் – குளத்துள்வாய்பட்டி பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 40 வீடுகளும் நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளன.

2.03 கோடி இந்திய ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் இட வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, சிவகாசி – ஆனைக்குட்டம் பகுதியிலும் இலங்கை தமிழர்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளன.

# சிலியின் முன்னாள் ஜனாதிபதி ஹெலிக்கொப்டர் விபத்தில் பலி

சிலியின் முன்னாள் ஜனாதிபதி செபாஸ்டியன் பினேரா, தனது 74வது வயதில் ஹெலிக்கொப்டர் விபத்தில் உயிரிழந்துள்ளார்.

தெற்கு நகரமான லாகோ ரான்கோ அருகே உள்ள ஏரியில் ஹெலிக்கொப்டர் விழுந்தபோது அதில் இருந்த மேலும் 3 பேர் உயிர் தப்பினர்.

பினேரா தனது சொந்த ஹெலிக் கொப்டரை ஓட்டினார், ஆனால் விபத் தின் போது அவர் விமானியாக இருந் தார் என்பது அதிகாரபூர்வ உறுதிப் படுத்தல் இல்லை.



பழமைவாத அரசியல்வாதியான அவர் 2010 முதல் 2014 வரை தனது முதல் பதவிக் காலத்தில் விரைவான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத் தினார். வெளிநாட்டில், 2010 ஆம் ஆண்டில் அட்டகாமா பாலைவனத்திற்கு அடியில் 69 நாள்கள் சிக்கியிருந்த 33 சுரங்கத் தொழிலாளர்களை மீட்டதில் அவர் மிகவும் பிரபலமானவர்.

இருப்பினும், அவரது இரண்டாவது பதவிக்காலம், 2018 முதல் கடந்த ஆண்டு வரை, வன்முறை சமூக அமை தியின்மையால் சிதைக்கப்பட்டது.

இதேவேளை, பினேராவின் மறைவு காரணமாக மூன்று நாள்கள் துக்கம் மற்றும் அரசு இறுதி ஊர்வலத்தை நடத்தும் என சிலியின் ஜனாதிபதி கேப் ரியல் போரிக் அறிவித்துள்ளார்.

# காஸா போர் நிறுத்தம் தொடர்பிலான முன்மொழிவுகளுக்கு ஹமாஸ் பதில்



காஸா போர் நிறுத்தத்திற்கான புதிய முன்மொழிவுகளுக்கு பதில் அனுப்பியுள்ளதாக ஹமாஸ் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல், அமெரிக்கா, கட்டார் மற்றும் எகிப்து ஆகிய நாடுகளால் உருவாக்கப்பட்ட இந்த உடன்படிக்கையின் விபரங்கள் வெளியிடப்படவில்லை.

6 வார போர் நிறுத்தம் இந்த உடன்படிக்கை யில் உள்ளடக்கப்படுமென முன்னர் அறிவிக்கப்பட்டி ருந்தது.

இதன்போது பலஸ்தீன சிறைக்கைதிகளுக்கு மாற்றாக மேலும் பல இஸ்ரேலிய பணயக்கைதிகள் பரிமாறப்படுவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், புதிய முன்மொழிவுகளுக்கு ஹமாஸ் அனுப்பிய பதிலை ஆராய்ந்து வருவதாக இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் தெரிவித்துள்ளன.

# ரஷ்யாவுடனான போருக்கு தயார் போலந்து அமைச்சர் அறிவித்தார்

அனைத்து வகையான போர் சூழ் நிலைகளையும் எதிர்கொள்ளத் தயா ராக இருகின்றோம் என போலந்து நாட் டின் பாதுகாப்பு அமைச்சர் விளாடிசா கோனேக் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற செய்தி யாளர் சந்திப்பில் ரஷ்யா, போலந்து நாட்டின் மீது தாக்குதல்களை மேற் கொள்வது குறித்து கேட்கப்பட்ட கேள்வி களுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

இதன்போது, நேட்டோ அமைப்பில் இணைவது குறித்த உக்ரைனின் விருப்பத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆரம்பமான உக்ரைன் -ரஷ்யா இடை யேயான போர் தற்போது போலந்து மீதான போர் அச்சுறுத்தலுக்கான வாய்ப்புகளை அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக் கையில்,

“அனைத்து வகையான போர் சூழ் நிலைகளையும் நாம் எதிர்பார்க்கிறோம். அதில் மோசமானவற்றை மிகவும் தீவிரமாக எடுத்துக்கொள்கிறோம், இன்று நாம் இருக்கும் சூழ்நிலையில் ஒரு பாதுகாப்பு அமைச்சரின் பணி அதுதான்.

தவிரவும், நாங்கள் எல்லா சூழ் நிலைகளுக்கும் தயாராக இருக்கிறோம், இதனை வெறும் பேச்சுக்காக மாத்திரம் சொல்லாமல், செயலிலும் காட்ட போலந்து இராணுவம் இறங்கியுள்ளது.

மேலும், போர் அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்கு தயாராகும் உறுதி யான நடவடிக்கைகளை ஏற்கனவே போலந்து தொடங்கியுள்ளது.

பெரிய அளவிலான ஆயுதக் கொள்



முதல் மிகவும் முக்கியமானதாக இருக்கின்றபோதிலும், ஒவ்வொரு இராணுவ வீரருக்கான தனிப்பட்ட ஆயுத தேவைகளையும், ஏனைய பாதுகாப்பு தேவைகளையும் நாங்கள் கவனத்தில் எடுத்துக் கொண்டுள்ளோம்.

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடை யேயான மோதலில் ரஷ்யா வெற்றி பெற்றால், நேட்டோவுடன் இணைந்த நாடுகளை குறிவைப்பதற்கு முன்பு அவர் தனது கவனத்தை மால்டோவா பக்கம் திருப்புவார்.” – என்றார்.